Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 20 | விலை 30 | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 279 ஆவணி 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை 04 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## தமிழ்த் தலைவர்களை சிறையிலடைக்கோம்!!!

### அவர்கள் தமது பொறுப்புணர்ந்து பேச வேண்டும் என்கிறார் மஹிந்த



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 4

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ்மக்கள்தேசியக்கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரை சிறையில் அடைக்கவேண்டிய தேவை எதுவும் அரசுக்கு இல்லை. எங்கள் அரசுக்கு எதிராக கருத்துச் சொல்பவர்களை சிறையில் அடைக்கவேண்டும் என்ற கோதாவில் நாம் களமிறங்கவில்லை. இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார். 18 ▶

## வடக்கில் செயலர்களுக்கு திடீர் மாற்றல்!

யாழ்ப்பாணம், செப். 4

வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட சில அமைச்சுக்களின் செயலர்களுக்கு நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண ஆளுநர் திடீரென இடமாற்றங்களை வழங்கியுள்ளார்.

உள்ளூராட்சி அமைச்சின் செயலராக கடமையாற்றிய திருமதி சரஸ்வதி மோகநாதன் வடக்கு மாகாண 18 ▶

## நிபுணர் குழுவின் கைகளில் '13'

கொழும்பு, செப்.4

புதிய அரசமைப்பை இயற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவே, 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் முன்மொழிவை முன்வைக்கும். அதன்பின்னரே அரசியல் ரீதியிலான தீர்மானம் எடுக்கப்படும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான உதயகம்மன்பில தெரிவித்தார். 18 ▶

## '20'

### '19' மூலம் பறிக்கப்பட்ட அதிகாரங்கள் ஜனாதிபதியிடம் மீள கையளிப்பு!

ஓராண்டுக்கு பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம்

2 சுயாதீன ஆணைக்குழுக்களும் நீக்கம்

அரசியலமைப்பு பேரவையும் இல்லை

கொழும்பு, செப்.4

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டமூலத்தின் பிரகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை பலப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. முக்கியமாக 19 இன் ஊடாக மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் '20' ஊடாக மீண்டும் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியொருவர் தமது பதவிகாலத்தின்போது முன்னெடுத்த நடவடிக்கைகளுக்காக அவருக்கு எதிராக வழக்கு தொடுக்க முடியாது என்பதுடன், உயர் பதவிகளுக்கான நியமனங்களை வழங்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. 18 ▶

## 13ஐ நீக்கும் உத்தரவாதம் வேண்டும்

### தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் விடாப்பிடி

கொழும்பு, செப்.4

புதிய அரசியலமைப்பை இயற்றும்போது 13 ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்படும் என்ற உத்தரவாதத்தை அரசாங்கம் வழங்கவேண்டும் என்று கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் கூட்டணியான 'தேசிய ஒருங்கமைப்பு 18 ▶



"13, 19 எண்டு ஒவ்வொரு நம்பரா மாத்திக் கொண்டிருந்தால் எப்படி மனப்பாடம் செய்யிறது? ஒரேயடியா முழு அரசியலமைப்பையே மாத்தி விடுங்கோவன்?"

## வேறு வழியில்லை அதனால் ஆதரவு!

### மைத்திரியின் நிலைமை இது



கொழும்பு, செப்.4

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை ஆதரிக்கும் கட்டாயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இருக்கின்றது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. 18 ▶

## 'ஓரணியாக திரண்டு எதிர்ப்போம்'

### பிரதான எதிர்க்கட்சிகள் சூளுரை

கொழும்பு, செப்.4

நாட்டில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி தலைமையிலான அதியுச்ச சர்வாதிகார ஆட்சிக்கும், குடும்ப ஆட்சிக்கும் அடித்தளம் இட்ட அரசமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டத்தை அப்படியே ஒத்ததாகவும், 16 ▶

## இளைஞர்களை மூர்க்கமாக தாக்கிய யாழ். பொலிஸார்

### உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 4

அரியாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் கைது செய்த 4 இளைஞர்களை யாழ்ப்பாணம் பொலிஸார் கடுமையாகத் தாக்கி சித்திரவதை செய்துள்ளனர் என அவர்களின் உறவினர்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்தியக் கிளையில் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர். 18 ▶

## திருத்தவேலை செய்பவர் தவறி வீழ்ந்து உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப்.4

யாழ்ப்பாணத்தில் வீட்டுத் திருத்த வேலைக்கு வந்திருந்த பெரும்பான்மையினத் தொழிலாளி ஒருவர் தவறி வீழ்ந்து 18 ▶

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வீடுகள் வழங்கியும்

# மீளக் குடியமராத 600 குடும்பங்கள்

### 25 ஆயிரம் வீடுகள் இன்னமும் தேவை

யாழ்ப்பாணம், செப். 4

**வலி. வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் காலத்துக்கு காலம் பல்வேறு வீட்டுத் திட்டங்கள் ஊடாக வீடுகளைப் பெற்ற 603 குடும்பங்கள் இன்னமும் மீளக் குடியமரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.**

யாழ்ப்பாண மாவட்டத்தின் மீள்குடியேற்றம் தொடர்பான துறைசார் மீளாய்வுக் கூட்டம் ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் தனியார் காணி விடுவிக்கப்படவேண்டும். அந்தப் பகுதிக்குள் 4 பாடசாலைகள் அமைந்துள்ளன. இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இன்னமும் 25 ஆயிரம் வீடுகள் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மீள்குடியமர்வுக்கு கடந்த காலங்களில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் பல்வேறு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த வீட்டுத் திட்டங்களைப் பெற்ற 603 குடும்பங்கள் மீளக்குடியமரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள காணிகளற்ற மக்களுக்கு அரசால் காணி கொள்வனவு செய்து நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டம் எவ்வளவு காலத்துக்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்பது தெரியாது. எனவே நலன்புரிநிலையங்களில் இன்னமும் தங்கியுள்ள மக்கள் இந்தத் திட்டத்தின் கீழ் உடனடியாக மாற்றுக் காணிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முடிவுகள் எவையும் எடுக்கப்படவில்லை. மீளாய்வுகளே மேற்கொள்ளப்பட்டன.

(ஓ.5)

## ஷானி, மெண்டிஸுக்கு 17வரை விளக்கமறியல்



கொழும்பு, செப்.4

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின்முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ரோஹண மெண்டீஸ் ஆகியோருக்கு எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன உள்ளிட்ட சந்தேகநபர்கள் தொடர்பில் போலி சாட்சியங்களை உருவாக்கி நீதிமன்றத்தை ஏமாற்றிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ரோஹண மெண்டீஸ் ஆகியோர் நேற்று கம்பஹா நீதிவான் மஞ்சுள கருணாரத்னவிடம் முற்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கு விவகாரம் தொடர்பில் மூன்றாவது சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வாவை கைதுசெய்வதற்காக நீதிமன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ள பிடியாணை உத்தரவு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், அவரை கைது செய்வதற்காக சிவப்பு அறிவித்தலை வெளியிடுவதற்காக சர்வதேச பொலிஸாரிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கொழும்பு குற்றப் பிரிவினர் மன்றுக்கு தெரிவித்துள்ளனர். இதேவேளை இந்த வழக்கின் நான்காவது சந்தேகநபராக முன்னாள் பொலிஸ் உத்தியோகஸ்தர் நவரத்ன பிரேமதிலக்க என்பவரின் பெயர் அறிவிக்கப்பட்டதுடன், அவருக்கு வெளிநாடு செல்வதற்கும் நீதிமன்றம் தடைவிதித்தது. இந்த உத்தரவு தொடர்பில் குடியகல்வு குடிவரவு திணைக்களத்துக்கு அறிவிக்குமாறும் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

முறைப்பாட்டாளர் சார்பில் கொழும்பு குற்றப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நெவில் டி சில்வா, பொலிஸ் பரிசோதகர் டீ.ஜே.நிஷாந்த ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

(எ-இ)

## பொலிஸ் தாக்குதல்: விசாரணை 15இல்

யாழ்ப்பாணம், செப். 4

யாழ்ப்பாண நகரப் பகுதியில் வைத்து முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவரைப் பொலிஸார் மூர்க்கத்தனமாக தாக்கிய சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதி விசாரணைகள் நடைபெறவுள்ளதாக, சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 21ஆம் திகதி நகரப் பகுதியில் முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டிருந்தார். அவருடன் கூட இருந்த மற்றொரு முச்சக்கரவண்டிச் சாரதிக்கும் சிவில் உடையில் வந்த பொலிஸ் அலுவலருக்கும் இடையிலான முரண்பாட்டை விலக்கச் சென்ற சாரதியே கடுமையாகத் தாக்கப்பட்டு, கடும் காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்தியக் கிளையில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கு அமைவாக எதிர்வரும் 15ஆம் திகதி விசாரணைக்கு திகதியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொலிஸ் உயர் அதிகாரிகள் சிலர், மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற சாரதியை சந்தித்து மன்னிப்புக் கோரி சமரச முயற்சிக்கு முயற்சித்துள்ளதாகவும் அறியமுடிகின்றது.

(ஒ.5)

### அரச திணைக்களங்களில்

## பயன்படுத்த முடியாத 9,704 வாகனங்கள்

கொழும்பு, செப். 4

அரச திணைக்களங்களில் தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் 9 ஆயிரத்து 704 வாகனங்கள் காணப்படும் நிலையில், அவற்றைத் திருத்துவது அல்லது ஒதுக்குவது என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

உரிய வகையில் பராமரிக்கப்படாததன் காரணமாக தற்பொழுது பயன்படுத்தப்படாத பெரும் எண்ணிக்கையிலான வாகனங்கள் அரச நிறுவனங்களில் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளதுடன் திருத்தி பயன்படுத்தக்கூடிய 4 ஆயிரத்து 116 வாகனங்கள் மற்றும் பாவனைக்கு தவாத 5 ஆயிரத்து 588 வாகனங்கள்உள்ளனஎன்றுஅடையாளம் காணப்பட்டுள்ளன.

இதற்கு அமைவாக செப்பனிட்டு பயன்படுத்தக்கூடிய பயனுள்ள வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தேவையான நிதி இல்லாத சந்தர்ப்பத்தில் தேசிய வரவு செலவு திணைக்களத்தால் அதற்கான நிதியை வழங்குவதற்கும், அவ்வாறு செப்பனிடப்பட்ட வாகனங்களை, போதுமான வாகனங்களைக் கொண்டிராத அரச நிறுவனங்களுக்கு நிதி அமைச்சின் கீழ் உள்ள கணக்கு தணிக்கையாளர் நாயக அலுவலகத்தின் ஊடாக உரிய வகையில் வழங்குவதற்கும், செப்பனிட முடியாத வாகனங்களை ஏற்ற நடைமுறையைக் கடைப்பிடித்து ஒதுக்குவதற்கும் நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

(ஒ.5)

## பிரதேச செயலகத்தில் மின் ஒழுக்கு

கொடிகாமம், செப்.4


புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நேற்று மின் ஒழுக்கால் தீப்பரவல் ஏற்பட்டது. தீ உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதால் பாதிப்புக்கள் ஏற்படவில்லை.

நேற்று மாலை இந்தச் சம்பவம் நடைபெற்றது. உடனடியாக மின் சுற்றுச் சீர்செய்யப்பட்டு, மின்சாரம் வழங்கல் வழமைக்குக் திரும்பியது என்று பிரதேச செயலர் எஸ். ஜெயகாந்தன் தெரிவித்தார்.

(எ-159)

## மணல் ஏற்றிய டிப்பர்: சாரதிக்கு எச்சரிக்கை

கிளிநொச்சி, செப்.4



கண்டாவளை, புளியம்பொக்கனையில் மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் வாகனம் ஊர் மக்களால் மறிக்கப்பட்டு, சாரதி எச்சரிக்கை செய்யப்பட்டு அனுப்பப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் செல்லும் டிப்பர் வாகனங்களால் தங்கள் கிராம வீதிகள், பாலங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மழை காலம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் பாலங்கள், வீதிகள் சேதமடைந்தால் தங்கள் விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாக மணல் ஏற்றும் டிப்பர்கள் தங்கள் கிராமங்களூடான போக்குவரத்தைத் தவிர்க்க வேண்டும் என்றும், எதிர்காலத்தில் அவ்வாறான டிப்பர் சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

(எ-21)

# கழிவு முகாமைத்துவம்: திங்களன்று செயலமர்வு

சாவகச்சேரி செப் .4

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையால் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கரையோர வலயத்தில் கழிவு முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு ஒன்று நடத்தப்படவுள்ளது.


எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நகரசபை பொன்விழா மண்டபத்தில் செயலமர்வு நடைபெறவுள்ளது.

செயலமர்வில் சபை எல்லைக்குட்பட்ட துறைசார் அலுவலர்களையும், அனைத்து கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் கரையோர வலயத்தில் சட்டங்களை நடைமுறைப்படுத்தக் கூடிய அனைத்து நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கரையோர முகாமைத்துவக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட கரையோர வலயங்களில் அதிகரித்து வரும் சனத்தொகை பரம்பல் மற்றும் மிதமிஞ்சிய வள நுகர்வு என்பவை கடல்சூழலின் தரத்தை அச்சுறுத்தி வருகின்றன. அந்த வகையில் கடல்சார்சூழல் பாதுகாப்பு அதிகார சபையானது உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் பிரதேச குழுக்களை அமைத்து அவற்றினூடாக கடல்சூழல் மாசடைதலை தடுப்பதற்கும் முகாமைத்துவமும் செய்வதற்கும் திட்டமிட்டுள்ளது.

செயலமர்வில் பிரதேச செயலர், உள்ளூராட்சி மன்றத் தவிசாளர், செயலாளர், தொழில்நுட்ப அலுவலர், பிரதேச மருத்துவ அலுவலர், பிரதேச பொலிஸ் பிரிவின் சுற்றாடல் பாதுகாப்பு பிரிவு பொறுப்பதிகாரி, இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபன அலுவலர், பிரதேச சுற்றாடல் அமைப்புகளின் இரு பிரதிநிதிகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் கடல்சார் சுற்றாடல் அலுவலர் எம். கேசவன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ 9)



# ஆணைக்குழுக்களின் அதிகாரங்களுக்கு 20 இன் ஊடாக வேட்டு

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

**கொழும்பு, செப். 4**


**20 ஆவது திருத்தம் ஊடாக ஆணைக்குழுக்களின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படும் என்று வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்ட பல விடயங்கள் இரத்து செய்யப்பட்டு 20 ஆவது திருத்த சட்ட மூல வரைபுக்கு அமைச்சரவை அங்கீகாரம் முழுமையாகக் கிடைக்கப்பெற்றுள்ளது. சுயாதீன ஆணைக்குழுக்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளமையை சிறந்த ஒரு விடயமாகவே கருத வேண்டும். ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மை கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் கேள்விக்குள்ளாக்கப்பட்டன. ஆணைக்குழுக்களுக்கு வரம்புக்கு மீறிய அதிகாரங்கள் வழங்கப்பட்டமையால் அவை பொறுப்பற்றவாறு செயற்பட்டன. நல்லாட்சி அரசின் காலத்தில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மை பல சந்தர்ப்பங்களில் சவாலுக்குட்படுத்தப்பட்டது.

எனவே, 20 ஆவது திருத்தத்தில் ஆணைக்குழுக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்படுதல் அவசியமாகும். ஆணைக்குழுக்களும் ஒரு தரப்பினருக்கு பொறுப்பு கூற வேண்டும். இல்லாவிடின் குழு சார் சர்வாதிகாரம் தோற்றம் பெறும். கடந்த காலங்களில் இவ்வாறான நிலைமையே காணப்பட்டது. என்றார். (து)

# தென்னமரவடி விநாயகருக்கு நீண்டகாலத்தின்பின் தீர்த்தம்





திருகோணமலை, செப். 4

திருகோணமலை தென்னமரவடி, வரசித்தி விநாயகர் கோவிலின் வருடாந்த அலங்கார உற்சவத்தின் தீர்த்தத் திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. காலையில் விநாயகருக்கு விசேட பூசைகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து விநாயகர் உள்வீதி வலம்வந்ததையடுத்து, கோவிலினுடைய மரபு வழியில் விநாயகர் வீதி உலாவாக பறையன் ஆற்றுக்கு எடுத்துவரப்பட்டு, அங்கு தீர்த்த உற்சவம் இடம்பெற்றது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக, தென்னமரவடி ஆலயத்தில் அலங்கார உற்சவம், நீண்டகாலமாக இடம்பெற்றிருக்கவில்லை. இந்தநிலையில் சுமார் 35ஆண்டுகளுக்குப் பிற்பாடு இந்த ஆலயத்தில் அலங்கார உற்சவம் இடம்பெற்றது. மரபுவழியில் தீர்த்த உற்சவமும் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் உட்பட பக்தர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டிருந்தனர். (த-246)



# மஞ்சள் மற்றும் மிளகுக்கு நிலையான விலை

## ஜனாதிபதி சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 4

மஞ்சள் மற்றும் மிளகுக்கு நிலையான விலை ஒன்றை வழங்கி பயிர்ச் செய்கையாளர்களை பாதுகாக்க வேண்டுமென்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பயிர்ச் செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மஞ்சள் மற்றும் மிளகு பயிர்ச் செய்கையாளர்களை பாதுகாப்பதற்காக அவற்றை இறக்குமதி செய்வது முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியாக சந்தை வாய்ப்புக்களை கண்டறிந்து ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலம் உயர் விலை ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு அவசியமான சூழலை உருவாக்குவதன் முக்கியத்துவம் பற்றியும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மஞ்சள் மற்றும் மிளகு தேவையை உள்நாட்டு பயிர்ச் செய்கையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாக ஏற்றுமதி செய்வதற்கும் முறையான திட்டமொன்றை தயாரித்தல் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

நாட்டின் வருடாந்த சோளத்துக்கான கேள்வி 5 இலட்சம் மெற்றிக் தொன்களாகும். அதனை நிறைவு செய்துகொள்வதற்கு பயிரிடப்பட வேண்டிய நிலத்தின் அளவு ஓர் இலட்சத்து பத்தாயிரம் ஹெக்ரெயர்களாகும். தற்போது 80 ஆயிரம் ஹெக்ரெயரில் சோளம் பயிரிடப்படுகின்றது. அடுத்தவருட இறுதியில் ஓர் இலட்சத்து பத்தாயிரம் ஹெக்ரெயர்களில் பயிரிடுவதே அரசின் நோக்கம்.

100 கிராமங்களில் மஞ்சள் மற்றும் இஞ்சியை பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, குருந்துகஹ, ஹெதெம்ம பிரசேத்தில் ஏற்றுமதி வலயம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மிளகாய் பயன்பாட்டுக்கு பதிலாக மக்கள் மத்தியில் மிளகு பயன்பாட்டை அதிகரிப்பதன் முக்கியத்துவம் பற்றியும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (து)

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல விடயங்கள் ஆராய்வு

மன்னார், செப். 4

நானாட்டான் பிரதேசத்தின் கல்வி, நீர்ப்பாசனத்திட்டம், விவசாயம், கால்நடை, சுகாதாரம், வைத்திய சேவை, போக்குவரத்து, குடிதண்ணீர் மற்றும் வீதி அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் நானாட்டான் பகுதி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்று ஆராயப்பட்டன.

நானாட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நானாட்டான் பிரதேசச் செயலரின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்றது.

இதில், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம், சார்ள்ஸ் நிர்மலநாதன்,குலசிங்கம்திலீபன்ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது நானாட்டான் பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளை பாதிக்காத வகையில் கால்நடைகளை பராமரித்து, உரிய மேய்ச்சல் நிலங்களுக்கு அனுப்ப வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

தடைப்பட்டுள்ள மற்றும் இடைநடுவில்விடப்பட்டுள்ளஅனைத்து அபிவிருத்தி திட்டங்களும் முழுமையாக்கப்பட வேண்டும்என்று அதிகாரிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நானாட்டான் பிரதேச சபையின் தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள், அழைக்கப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள், பொது அமைப்புக்கள், கல்நடை மற்றும் விவசாய அமைப்புகளின் தலைவர்கள் பலர் கலந்துகொண்டிருந்தனர். (த-56)

# செவ்வண்டுகளின் தாக்கத்தால் ஒலுமடுவில் தென்னைகள் அழிவு

## நேரில் சென்று ஆராய்ந்தார் வைகுந்தன்



**முல்லைத்தீவு, செப்.4**
**முல்லைத்தீவு ஒலுமடுப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான தென்னைகள் செவ்வண்டினால் பாதிக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவ்வாறு பாதிக்கப்பட்ட தென்னைகளை வடக்கு மாகாண தென்னைப் பயிர்ச்செய்கை முகாமையாளர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.**

முல்லைத்தீவில் பல பகுதிகளிலும் உள்ள தென்னைகளை செவ்வண்டுகள், மற்றும் குறவணன்கள் கடுமையாகத் தாக்கி வருகின்றன. இது தொடர்பில் தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்திருந்தனர். நீண்டகால நோக்கத்துடன் பயிரிடப்பட்ட தென்னங் கன்றுகளை இளமைப் பருவத்திலேயே வண்டுகள் தாக்குவதால், அவை பாதிப்படைகின்றன எனவும் இதனால் இழப்புக்களைச் சந்தித்து வருவதாகவும் செய்கையாளர்கள் தெரிவித்திருந்தனர். முல்லைத்தீவு ஒலுமடுப் பிரதேசத்திலும், ஆயிரக்கணக்கான தென்னைகளை செவ்வண்டுகள் தாக்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு பாதிக்கப்பட்ட கன்றுகளையே வடக்கு மாகாண தென்னை பயிர்ச் செய்கை முகாமையாளர் த.வைகுந்தன் நேரில் சென்று பார்வையிட்டார்.

இப் பாதிப்பைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு அவர் விளக்கத்தை வழங்கியதோடு அதற்கான கிருமிநாசினிகளை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்தார். (ப)



# பளையில் வகை தொகையின்றி அழிக்கப்படும் சஞ்சீவிக் காடு

## பாதுகாக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, செப் 4
பச்சிலைப்பள்ளி, வண்ணாங்கேணி, தம்பகாமம் பகுதியில் உள்ள சஞ்சீவிக் காடு வகை தொகையின்றி அழிக்கப்பட்டு வருவதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களே வண்ணாங்கேணி மற்றும் தம்பகாமம் ஆகும். அந்தக் கிராமங்களில் முன்னைய காலங்களில் காணப்பட்ட சஞ்சீவி மரக்காடானது தற்போது வகை தொகை இன்றி அழிக்கப்பட்டு வருகின்றது. மரங்களை வெட்டி விற்பனை செய்வதற்காகவும், வேலித் தேவைகளுக்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன. ஏனைய பிரதேசங்களில் வனவளத் திணைக்களத்தினர் பல்வேறு முறைகளில் காடுகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ள போதும் இங்கு காடுகள் அழிக்கப்படுகின்றமையை அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லையா? காடுகள் அழிக்கப்படுகின்றமையால் மழை வீழ்சி குறைவடைந்துள்ள நிலையில், இவ்வாறு தொடர்சியாக சஞ்சீவிக் காடுகள் அழிக்கபடுகின்றமை வரும் காலத்தில் மழைவீழ்ச்சியைக் குறைத்து வெப்பமான காலநிலைக்கு வழிகோலும். எனவே இந்தக் காடுகளைப் பாதுகாப்பதற்கு உரியவர்கள் உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றனர்.

"மரங்களை வெட்டி விற்பனைக்காக எடுத்துச் சென்றவர்கள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு வருகின்றனர். சஞ்சீவி மரங்கள் வெளி மாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களிலும் கைதுகள் இடம்பெற்றுள்ளன. அந்தப் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று இது தொடர்பில் பளைப் பொலிஸார் தெரிவித்தனர். (ப-6)

# கட்டுமானப் பணிகள் தொடர்பில் கலந்தாய்வு

மட்டக்களப்பு. செப்.4
மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசத்தில் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள பொதுச்சந்தைக் கட்டடம், கலாசார மண்டபம், வாவிக் கரையோர சுற்றுலா மையம் ஆகியவற்றின் நிர்மாணப் பணிகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமத் தலைமையில் ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின் இறுதியில் தீர்க்கமான முடிவுகள் எட்டப்பட்டன. அதன்படி பொதுச்சந்தையின் கீழ் தளப்பகுதியின் கட்டுமானங்கள் 90 வீதம் முடிவுற்றுள்ள நிலையில் மீதமுள்ள கட்டுமானப் பணிகளை இவ்வருட இறுதிக்குள் முடித்து மக்கள் பாவனைக்குப் பொதுச் சந்தையைக் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு பொதுச்சந்தையின் மேல் தளப் பகுதியின் வேலைகளை முற்று முழுதாக நிறைவேற்ற பொதுச்சந்தைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை அடுத்த வருட மாகாண நிதி ஒதுக்கீட்டில் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல், கலாசார மண்டபத்தின் கட்டுமானப் பணி ஒப்பந்தத்தை தனியார் கட்டுமான நிறுவனத்திடமிருந்து விலக்கி, அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைத்து மீதமுள்ள கட்டுமானங்களைப் பூரணத்துவப்படுத்துவ தற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ளல், வாவிக்கரையோரம் 100 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் சுற்றுலா மையம் உருவாக்க எடுத்துக்கொண்ட முயற்சியில் 8 மில்லியன் ரூபா செலவில் இடைநிறுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தை மேலும் தொடர்வதற்கான நிதிகளை பெறுதல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.
(ப)

# ஹெரோய்ன் மீட்பு: ஒருவர் கைது

யாழ்பபாணம், செப். 4
யாழ்ப்பாணம் கொக்குவிலி ல் பகுதியில் 530 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமானப்படையின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய கொக்குவிலில் உள்ள வீட்டில் நடத்திய சோதனையில் அவர் கைதுசெய்யப்பட்டார்.

இதன்போது ஆயிரத்து 530 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. அலைபேசிகளும் அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலதிக விசாரணைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-25)





மன்னார் மறைமாவட்டத்தில் தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலய பங்கில் 46 சிறார்கள் முதல் நன்மை என்னும் திருவருட்சாதனம் பெற்றனர். பங்குத் தந்தை அருட்பணி பி.யேசுராஜா அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமலமரி தியாகிகள் சபையைச் சார்ந்த அருட்பணி ஏ.பி.வின்சன்ட் அடிகளார் தலைமைதாங்கி கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். (ப-60)

# ஸ்ரீவெங்கடாசலபதி ஆலயத் திருவிழா

சாவகச்சேரி, செப். 4
சாவகச்சேரி வாரிவனேஸ்வர ஸ்ரீவெங்கடாசலபதி கோவில் பெருந்திருவிழா கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும். ஒன்பதாம் திகதி தேர்த் திருவிழாவும் மறு நாள் கடல் தீர்த்த திருவிழாவும் இடம்பெறும். திருவிழாக் கிரியைகள் விஷ்ணு ஸ்ரீகிரிதரக் குருக்கள் தலைமையில் இடம்பெற்று வருகின்றன. (ப)

# கிராம மட்ட பிரச்சினைகள் ஆராய்வு

## களத்தில் இறங்கினார் மஸ்தான் எம்.பி.

மன்னார், செப்.4
மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன் கிராம மட்டங்களில் உள்ள பிரச்சினைகளை முதலில் தெரிந்துகொண்டு அவற்றை மாவட்ட, பிரதேச மட்டத்தில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் நோக்குடனே கிராமிய மக்களைச் சந்திப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளுகின்றேன் என நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு கிராம மட்டத்திலும் திட்டங்களை அடையாளப்படுத்தி திட்டமிட்டு அவற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இதன் நோக்கமாகவே நாம் மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்திக் கூட்டங்களில் மேற்கொள்ளப்பட இருக்கும் அபிவிருத்தித் திட்டங்களை கிராம மட்டத்திலுள்ள உங்களிடம் முதலில் ஆராய்ந்து பின் அக் கூட்டங்களில் முன்னெடுத்துச் செல்ல வழி வகுக்கும். இங்கு முக்கிய பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே நாம் ஒவ்வொன்றையும் இனம் கண்டு நடவடிக்கை எடுக்க இருக்கின்றோம் - என்றார். (ப-60)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அதிகாரப் பூதத்தோடு வாழக் கற்றுக்கொள்ளுங்கள்

கோபாலன் புத்தியுள்ள ஒரு சிறுவன். ஒருநாள் அவன் கடற்கரையில் விளையாடிக்கொண்டிருந்தான். அவ்வேளை கடலில் இருந்து வீசிய அலையோடு ஒரு சிறிய சாடி மிதந்து வந்தது. அதை எடுத்த கோபாலன் அதன் மூடியை ஆவலோடு திறந்தான். உள்ளிருந்து உருவம் ஒன்று வெளியே வந்தது. அது வளர்ந்து வளர்ந்து பெரிய அரக்கன் ஆனது. பெரு வியப்பும் அச்சமும் அடைந்த கோபாலன் "நீ யார்?" என்று கேட்டான். அரக்கன், "நான் உன்னை விழுங்க வந்தவன்" என்று சொல்லிப் பெரிதாகச் சிரித்தபடி கிட்டவந்தான்.

கோபாலன் தன்னைச் சுதாரித்துக்கொண்டு சற்றும் அஞ்சாமல், "அடடா இவ்வளவு பெரியவனாக இருக்கிறாயே. நீ இந்தச் சிறிய சாடிக்குள் எப்படி இருந்தாய்? என்னால் நம்ப முடிய வில்லையே. ஒரு முறை இச்சிறிய சாடிக்குள் புகுந்துகாட்டு பார்க்கலாம்"என்றான் .கலகலவென்று சிரித்த அரக்கன் உருவத்தைச் சுருக்கிச் சாடிக்குள் நுழைந்தான்.உடனே கோபாலன் சாடியை இறுக்கி மூடிக் கடலில் எறிந்தான்.

முன்னைய காலங்களில் ஆரம்பப்பிரிவில் போதிக்கப்பட்ட இந்தக் கதையில் வருவது போன்ற மிகப்பெரிய அரக்கனான 'நிறைவேற்று அதிகார ஜனாதிபதி' யை கொஞ்மேனும் சுருங்கச் செய்து, ஒரு சாடிக்குள் போடச் செய்திருந்தது 19 ஆவது திருத்தம். ஜே.ஆர் ஜயவர்த்தன வரையின்றிக் கொடுத்திருந்த பல அதிகாரங்கள் ஜனாதிபதியிடம் இருந்து பிடுங்கப்பட்டு,ஓரளவுக்கேனும் ஜனநாயகத் தன்மை வாய்ந்த ஜனாதிபதி முறைமைக்கு 19 ஆம் திருத்தம் வழிவகை செய்திருந்தது. அதனால் தான் மைத்திரிபால சிறிசேன, கடைசிக் காலங்களில் அவர் தின்ற அப்பம் செமிக்காமல் பித்தம் தலைக்கேறி ஆடிய ஆட்டங்களையெல்லாம் கட்டுப்படுத்த முடிந்திருந்தது. குறிப்பாக ஜனநாயக மரபுக்கு மாறாக அவர் நாடாளுமன்றைக் கலைத்தமை, மஹிந்தவைத் திடீர்ப் பிரதமராக்கியமை போன்ற கூத்துக்களைத் தடுக்க முடியாமல் போயிருக்கும். பல்லுப் பிடுங்கிய பாம்பாக மைத்திரியால் சீற முடிந்ததே தவிர, எவரையும் தீண்டமுடியாமல் போனமைக்கும் 19 ஆம் திருத்தமே காரணம்.

இந்த நிலையில் நாடி, நரம்பெல்லாம் அதிகாரவெறி கொண்ட ராஜபக்சக்களுக்கு அதிகாரங்கள் குறைக்கப்பட்ட ஜனாதிபதி முறைமை கண்ணை உறுத்தியது. எனவேதான் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் முதற்காரியமாக 19 ஆம் திருத்தத்தை ஒழித்து, 20 ஆம் திருத்தத்தின் மூலம் சாடிக்குள் முடங்கிக் கிடக்கும் நிறைவேற்று அதிகார முறைமையை கட்டுக்களை அவிழ்த்து வெளியில் கொண்டுவரும் வேலையில் மூழ்கினார்கள். கொரோனா ஒழிப்பு, விலைவாசி, வேலையில்லாப் பிரச்சினை, பொருளாதாரச்சரிவு என்ற ஏகப்பட்ட பிரச்சினைகளையெல்லாம் ஓரமாக வைத்துவிட்டு, எம் கடன் 19 ஐ ஒழிப்பதே என்கிற ரீதியிலேயே ராஜபக்ச அரசு இயந்திரத்தனமாக இயங்கி, 20 ஆம் திருத்த வரைவை அமைச்சரவையில் சமர்ப்பித்து அதனை வர்த்தமானியிலும் பிரசுரித்து விட்டது.

ஜனாதிபதியாக ஒருவர் இரு தடவைகளுக்கு மேல் பதவி வகிக்க முடியாது என்பதைத் தவிர, 19 இல் பிடுங்கப்பட்ட அத்தனை அதிகாரங்களையும் மீண்டும் நிறைவேற்றதிகாரத்தின் காலடியில் சமர்ப்பித்திருக்கிறது 20 ஆவது திருத்தம். இனிமேல் கோத்தாபயவால் நாடாளுமன்றம் கூட்டப்பட்டு ஓராண்டு பூர்த்தியான பின்னர் எப்போது வேண்டுமானாலும் கலைக்க முடியும், பிரதமரை விரும்பிய நேரத்தில் நீக்க முடியும், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்க முடியும், எத்தனை அமைச்சையும் தன் வசம் வைத்திருக்க முடியும். இப்படி ஏகப்பட்ட சக்திகள் மீளக் கிடைத்திருக்கின்றன நிறைவேற்று அதிகாரத்துக்கு. சும்மாவே இராணுவச் சாட்டையோடு கலையாடுகின்ற கோத்தாபய கையில் இப்படி, ஜே.ஆர் செய்துவைத்த சக்திகளின் தாயத்தும் கிடைத்து விட்டால் அவ்வளவுதான். வெளிப்பார்வைக்கு ஜனநாயகச் சாயத்தைப் ,பூசிக்கொண்டு தாராளமாக ஒரு இராணுவ ஆட்சியை நடத்தும் சந்தர்ப்பங்கள் மிக அதிகம்.

ஆனாலும் இப்போதுள்ள அரசியல் சூழமைவில் 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவதையும், கோத்தாபய கைகளில் எல்லைகளற்ற அதிகாரங்கள் குவிவதையும் தடுக்க முடியுமென்று தோன்றவில்லை.எதிரணியில் நிற்கும் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைவதுடன், மொட்டோடு கூட்டு வைத்திருக்கும் சுதந்திரக் கட்சியும் 20 ஆவது திருத்தத்தை எதிர்த்தாலே புத்தியுள்ள கோபாலனைப் போல மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தடுத்து, 20 ஆம் திருத்தத்துக்கு முட்டுக்கட்டை போடமுடியும் .ஆனால் எதிரணியில் உள்ளவர்களையே தங்கள் பக்கம் வளைத்துப் போட இப்போதே ராஜபக்சக்கள் வியூகம் போட்டிருப்பார்கள். எனவே 20 ஆவது திருத்தம் நிறைவேறி, சாடிக்குள் இருந்த பூதம் வெளியேறி ஒரு ஆட்டம் போடத்தான் போகின்றது. ராஜபக்சக்களுக்கு எதிரான தரப்பு ,நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறும் வரை இந்த ஆட்டம் தொடரலாம். ஆனால் அதெல்லாம் இப்போதைக்கு நடக்கக்கூடிய காரியங்களல்ல. எப்படி கொரோனாவை ஒழிக்கமுடியாமல் கொரோனாவோடு வாழக் கற்றுக்கொண்டோமோ அதே போல நிறைவேற்று அதிகாரப் பூதத்தை அடைப்பதை விடவும் **அதனோடு வாழக் கற்றுக்கொள்வதே இலங்கையரின் தலைவிதியாக இனி இருக்கப் போகின்றது.**

# ராஜபக்ஷக்களுக்கு நெருக்கடி கொடுக்கும் அரச அலுவலர்

## சிலாகிக்கும் சமூக ஊடகங்கள்

**கொழும்பு, செப். 4**

**லங்காகம கிராமத்தினருக்கு தனது சொந்தக் காணியை மாற்றுக் காணியாக வழங்கத் தயாராக இருக்கிறார் என கம்பஹா மாவட்ட வன வள பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர் தேவானி ஜெயதில வெளியிட்டுள்ள அறிவிப்பு சமூக ஊடகங்களில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.**

லங்காகம கிராமத்தினர் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்கு சிங்கராஜ வனத்தைச் சுற்றி வரவேண்டியிருப்பதாகவும் அதற்காக நீண்ட தூரம் அலைய வேண்டியுள்ளதுடன், பெருமளவு நேரம் விரயமாவதாகவும், இதனால் சிங்கராஜ வனத்தை ஊடறுத்து பாதை அமைத்துத்தருமாறு அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பாதை அமைக்கப்படுவதாகவும் அரசு தெரிவித்திருந்தது.

ஆனால் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோசித ராஜபக்ஷவுக்குச் சொந்தமான ஹோட்டலுக்காகவே அந்தப் பாதை அமைக்கப்படுவதாக சுற்றுச் சூழலியலாளர்கள் குற்றச்சாட்டு முன்வைத்தனர். அதனை யோஷித மறுத்துள்ளதுடன், குற்றச்சாட்டை முன்வைத்தவருக்கு எதிராக இழப்பீடு கோரியுள்ளார்.

ராஜபக்ஷக்களின் இந்தச் சர்ச்சைக்குள் புதியதொரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார் கம்பஹா மாவட்ட வனவள பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர் தேவானி ஜெயதிலக. தனக்குச் சொந்தமான காணியை, லங்காகம கிராம மக்களுக்கு வழங்கத் தயாராக இருக்கிறார் என அதிரடி அறிவிப்பு வெளியிட்டுள்ளார். லங்காகம மக்கள் அங்கே வந்து குடியேறினால், லங்காகமவை சிங்கராஜ வனத்துடன் இணைக்க முடியும். அத்துடன் இந்த வீதியும் அமைக்கப்படத் தேவையில்லை. எனவே தற்போது தோன்றியுள்ள சுற்றுச் சூழல் சர்ச்சையை முடிவுக்கு கொண்டு வரமுடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் சமூக ஊடகங்களில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதுடன், ராஜபக்ஷக்களுக்கு நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளது.

**யார் தேவானி ஜெயதிலக?**

தேவானி ஜெயதிலக சமூக ஊடகங்கள் ஊடாக பெரிதும் மதித்துக் கொண்டாடப்பட்டவர். மஹிந்த ராஜபக்ஷவின் தற்போதைய இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, 52 நாள் அரசின் காலத்தில் நீர்கொழும்பிலுள்ள சதுப்பு நிலத்தை கரப்பந்தாட்ட மைதானம் அமைக்க வழங்க முடிவெடுத்தபோது, பொதுக்கூட்டத்தில் பகிரங்கமாக எதிர்த்தார். அந்தக் காணொலி வெளியாகி இலங்கை முழுவதும் அவர் கொண்டாடப்பட்டார். (ஒ,5)

## குற்றச்சாட்டுக்களை நிரூபித்தால் உடனடியாக பதவி விலகுவேன்

### விக்கிக்கு அங்கஜன் சவால்

யாழ்ப்பாணம், செப்.4

பொதுத் தேர்தல் பிரசாரத்தின் போது, ஒருவருக்கேனும் தான் சாராயம் வாங்கிக் கொடுத்ததையோ, ஐயாயிரம் ரூபா பணத்தைக் கொடுத்ததையோ சி.வி. விக்னேஸ்வரன் நிரூபிப்பாரேயானால், அரசியலை விட்டு விலகத் தயாராக உள்ளேன் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், அங்கஜன் இராமநாதன் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளமை தொடர்பில் அந்த ஊடகம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த சி.வி. விக்னேஸ்வரன், சாராயம் மற்றும் பணத்தைக் கொடுத்ததன் மூலமே அது சாத்தியமானது என கருத்து வெளியிட்டிருந்தார்.

இதுதொடர்பாக அங்கஜன் இராமநாதன் கருத்து வெளியிடுகையில், சி.வி. விக்னேஸ்வரன் தன் மீதான குற்றச்சாட் டுக் களை நிரூபிப்பாரேயானால் தான் அரசியலை விட்டு விலகத் தயாராக உள்ளேன் எனத் தெரிவித்துள்ளார். (ந)

## இடம் மாறுகிறார் நாமல் ராஜபக்ஷ!

கொழும்பு, செப். 4

இளைஞர் விவகார அமைச்சை புதிய இடத்திற்கு மாற்ற அமைச்சர் நாமல் ராஜபக்ஷ முடிவு செய்துள்ளார்.

இளைஞர் விவகார அமைச்சு தற்போது உலக வர்த்தக மையத்தில் இயங்கி வருகிறது. அமைச்சின் கட்டடத்திற்காக மாதாந்தம் 3.9 மில்லியன் ரூபா வாடகை செலுத்தப்பட்டு வருகிறது. 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் உலக வர்த்தக மையத்துடனான ஒப்பந்தம் முடிந்தவுடன் அமைச்சை இடமாற்றுமாறு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். சுகததாச விளையாட்டு வளாகத்திற்குள் அமைச்சின் அலுவலகத்தை இயங்க வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (ம-இ)

## இலங்கை அரசுக்கு எதிராக பிரிட்டனில் போராட்டம்




இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் பிரிட்டனில் போராட்டம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இலங்கையில் இடம்பெற்ற 30 ஆண்டுகால போரில் இராணுவத்தால் காணாமல் ஆக்கப்பட்டுள்ள உறவுகளுக்கு நீதி கோரி இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

2009 இறுதிப் போரின் போது 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இலங்கை ராணுவத்தால் காணாமல் ஆக்கப்பட்டனர். வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். இதனால் கடந்த 10 ஆண்டுகளாக காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்காக பல்வேறு கட்ட போராட்டங்களை தமிழ் மக்கள் நடத்தி வருகின்றனர். இந்நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கிடைக்கும் வரை நியாயமான தீர்ப்புக் கிடைக்கும் வரை நாம் போராடிக் கொண்டிருப்போம் என்று புலிக்கொடிகளை ஏந்திய வண்ணம் போராட்டக்காரர்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். (வ-21)

பண்டாரவன்னியன் சிலைக்கு

# வீதி திருத்த நிதியில் தான் சிலையடியில் படிக்கட்டுக்கள்

## வவுனியா நகரசபை தகவல்

வவுனியா, செப்.4

**வவுனியா நகரசபைக்குட்பட்ட 6ஆம் வட்டாரத்தில் வீதித் திருத்தத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலேயே பண்டாரவன்னியன் சிலைக்கான படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன என்று வவுனியா நகரசபை தெரிவித்துள்ளது.**

வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கம்பீரமாகக் காணப்பட்ட பண்டாரவன்னியனின் சிலைக்கு வருடத்தில் ஒருதடவை நினைவு தினத்தில் மாலை போடுவதற்கு வசதியாக மூன்று இலட்சத்து எழுபத்தி ஐயாயிரம் ரூபாய் (375,000) பெறுமதியில் படிக்கட்டு அமைக்கப்பட்டு வருகின்றது. அந்தப் படிக்கட்டு அமைக்கப்பட்டமை மற்றும் நிதி விடயங்களைக் கோரி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக தகவல் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, நகர சபையால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தின் தீர்மானத்துக்கு அமைவாக 6ஆம் வட்டாரத்துக்கு 45 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டம் பிரிக்கப்பட்டதாகவும் அதில் சிறைச்சாலை வீதியூடாகச் சென்று சந்தை உள்வட்ட வீதிக்குச் செல்லும் வீதியை சீரமைப்புச் செய்வதற்கு ஒதுக்கப்பட்ட 5 லட்சத்து 65ஆயிரம் ரூபா நிதியில் 2 லட்சத்து 45ஆயிரம் ரூபா நிதி வட்டார உறுப்பினரின் முன்மொழிவுடன் ஏகமனதாக பண்டாரவன்னியன் சிலைக்கு படிக்கட்டு அமைப்பதற்கு மாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 6ஆம் வட்டாரத்தில் பல அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் வருடத்தில் ஒருதடவை பயன்படுத்துவதற்காக அபிவிருத்திக்கு வந்த நிதியை மாற்றி படிக்கட்டுகள் அமைக்கும் நடவடிக்கையில் வட்டார உறுப்பினர் ஈடுபட்டமை தொடர்பாக அந்தப் பகுதியைச் சேர்ந்த பலரும் விசனம் தெரிவித்துள்ளனர். (ப)

# ஆளணிகளை அங்கீகரிக்க ஆளுநர் முன்வரவேண்டும்

## தவிசாளர்களின் கூட்டு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.4

பட்டதாரி அலுவலர்களையோ அன்றி அபிவிருத்தி அலுவலர்களையோ உள்வாங்குவதற்கான ஆளணிகள் மிக மிகக் குறைவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் தான் மத்திய மாகாண அரச நிறுவனங்கள் பழைய மற்றும் புதிய பட்டதாரிகளை ஏற்று சம்பளம் வழங்க முடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளதை வடமாகாண ஆளுநர் முதலில் உணர வேண்டும் என யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களின் கூட்டு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

தற்போது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச காலத்தில் 60 ஆயிரம் பட்டதாரிகள் திட்டத்தில் நியமனங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் நியமனத்துக்குப் பொறுப்பான அமைச்சு, நிதியமைச்சு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் என்பன இணைந்து உரிய காலத்தில் தேவையான ஆளணிகளை அங்கீகரிப்பது என்பது மிகக் குறைவு. வடக்கில் 36 க்கும் மேற்பட்ட அரச திணைக்களங்கள் உள்ளன. இவற்றில் ஒவ்வொரு அரச திணைக்களத்திலும் பட்டதாரிகளை உள்வாங்குவதற்கான ஆளணி விவரங்களைத் திரட்டினால் குறைந்தது 3 முதல் 6 வரையான ஆளணியே அங்கீகரிக்கப்பட்டிருக்கும். இதனால் எமது வடக்கு பிரதேச பட்டதாரிகள் குறைந்த ஆளணி அங்கீகரிப்பால் அரச திணைக்களங்களில் உள்வாங்க முடியாத நிலையேற்படுவதுடன், மிகை நிலையிலேயே வைக்கப்படவேண்டிய துர்ப்பாக்கிய சூழலில் பட்டதாரி அரச அலுவலர்கள் உள்ளனர். எனவே வடக்கு மாகாண ஆளுநர் 2005முதல் 2020 வரை புதிய பட்டதாரி நியமனங்களில் உள்வாங்கப்பட்ட பட்டதாரிகளின் நிலையை தற்போதே உறுதிப்படுத்த குறைந்தது ஒவ்வொரு அரச திணைக்களத்திற்கும் 35 முதல் 50 வரையான புதிய ஆளணிகளை அங்கீகரிப்பதற்கான நடவடிக்கையை உடன் மேற்கொள்ள வேண்டும்-என்றுள்ளது. (ப-50)

# ஆலங்கட்டி மழைக்கு வாய்ப்பு

வவுனியா, செப்.4

மழையுடனான காலநிலை தொடர்வதோடு, ஆலங்கட்டி மழை பெய்யவும் வாய்ப்பு உள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் வவுனியா நிலைய பொறுப்பதிகாரி தா.சதானந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மாவட்டத்தின் சில இடங்களில் கடந்த மூன்று நாள்களாக ஆலங்கட்டி மழை பெய்துள்ளது. இந்த மழையுடனான காலநிலை இன்னும் மூன்று நாள்களுக்கு நீடிக்கும். அத்துடன் இவ்வாறான காலநிலையின்போது இடியுடன்கூடிய பலத்த காற்றும் வீசக்கூடும். பொதுமக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் - என்றார். (ப-18)



# 3 நாள்களில் 52.4 மி.மீ. மழைவீழ்ச்சி பதிவு

வவுனியா, செப்.4

வவுனியாவில் கடந்த மூன்று நாள்களில் 52.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என வளிமண்டலவியல் திணைக்களத் தின் வவுனியா நிலைய பொறுப்பதிகாரி தா.சதானந்தன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த 30ஆம் திகதி மழைத் தூறலுடனான காலநிலை காணப்பட்டது. மறுநாள் 31ஆம் திகதி மழை பெய்யத் தொடங்கியது. அன்றையதினம், 23.1 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், முதலாம் திகதி 26.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் , 2ஆம் திகதி 2.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப-18)

# வாடகைக் கட்டடத்தில் இயங்கும் 3 சங்கங்கள்

## அரச காணியை ஒதுக்கித் தருமாறும் வலியுறுத்து

வவுனியா, செப்.4

வவுனியாவில் உள்ள மூன்று சங்கங்கள், கடந்த 10 வருடங்களாக வாடகை கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பஸ் உரிமையாளர் சங்கம் , முச்சக்கரவண்டிகள் சங்கம் , வர்த்தக சங்கம் என்ற மூன்று சங்கங்களுமே வாடகைக் கட்டடங்களில் செயற்பட்டு வருகின்றன. அந்தச் சங்கங்களுக்கு கைவிடப்பட்ட அரச காணியை ஒதுக்கித் தருவதாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டபோதும், இன்று வரையிலும் காணி வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

"ஒவ்வொரு தடவையும் தெரிவாகும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் மாவட்டச் செயலரிடமும், பிரதேச செயலரிடமும் எமது கோரிக்கைகளையும் மனுக்களையும் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றோம். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும், தவறாது கலந்துகொண்டு காணிகளைக்கேட்டு வருகிறோம். கைவிடப்பட்ட அரச காணி ஒன்றை எமக்கு அடையாளப்படுத்தும்போது எமது சங்கத்தின் நிதியிலிருந்து எமக்கான சொந்தக் கட்டடங்களை அமைக்க நாங்கள் தயாராக உள்ளோம்." என பாதிக்கப்பட்ட வவுனியா மாவட்ட பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார். (ப)

# பெக்கோ கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழப்பு

கண்டி, செப்.4

பெக்கோ இயந்திரம் கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார், இருவர் காயமடைந்தனர். இந்த விபத்து கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹந்தான தபோதாரகம வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பெக்கோ இயந்திரம் கட்டுப்பாட்டை இழந்து திடீரென பின்நோக்கிச் சென்று கவிழ்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

பெக்கோவில் பயணித்த மூவர் காயமடைந்து கண்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் 37 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-இ)

# மாகாண சபை முறைமையே தீர்வுக்கான ஒரே முறைமை

## முன்னாள் எம்.பி. ஹிருணிகா தெரிவிப்பு

கொழும்பு, செப்.4

மாகாண சபை முறைமையே நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு தரக்கூடிய சரியான முறையெனத் தெரிவித்த முன்னாள் எம்.பி. ஹிருணிகா பிரேமசந்திர, மாகாண சபை முறையை முற்றாக ஒழித்துக்கட்டுவதற்கு, இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகரவால் முடியாது என்றார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

அரசாங்கம், 13ஆவது திருத்தத்தை நீக்கிவிட்டு, மாகாண சபை முறையை முற்றாகத் துடைத்தெறிய முயற்சிப்பதாகக் கூறிக்கொண்டிருந்தாலும், இந்தியாவைப் பகைத்துக்கொள்ள அரசாங்கம் ஒருபோதும் முயற்சிக்காது. இலங்கையின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கிலேயே 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டுமென்ற இணக்கப்பாடு இந்தியாவுடன் எட்டப்பட்டது. மாகாண சபைகள் அவசியமில்லை எனக் கூறும் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர போன்றவர்கள், நாட்டில் தேசியப் பிரச்சினை இன்றும் முடிவுக்கு வரவில்லை என்பதை மறந்துவிட்டனர் - என்றார். (ப-இ)

# 5 பிள்ளைகளுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு சத்துணவு

## கிளிநொச்சியில் நேற்று ஆரம்பம்

**கிளிநொச்சி, செப்.4**

**கிளிநொச்சி மாவட்டத்தில் ஐந்து பிள்ளைகளை அங்கத்தவர்களாகக் கொண்ட குடும்பங்களுக்கு மாதாந்தம் சத்துணவு வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.**

ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை 10 மணியளவில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் கலைவாணி தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர், குடும்ப நல சுகாதார மருத்துவர் நிமால் கிஸ்ரோபன், குடும்பநல உத்தியோகத்தர்கள், மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த ஆண்டு முதல் இந்தத் திட்டம் கிளிநொச்சியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. குடும்பத்தில் ஐந்து அல்லது அதற்கு மேல் பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு கரைச்சி பிரதேச சபையினால் மாதாந்தம் 3000 ரூபா பெறுமதியான சத்துணவு வழங்கப்படவுள்ளது. எனினும் இந்த ஆண்டில் இது வரை 9 பேர் மாத்திரமே இதற்குத் தகுதி பெற்றுள்ளனர் என கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.



இவர்களுக்கு ஒரு மாதத்துக்கு மூவாயிரம் ரூபா பெறுமதியான சத்துணவை வழங்குவதற்கு பிரதேச சபை தீர்மானித்துள்ளது எனவும் ஒரு வருடத்திற்கு குறித்த சத்துணவுப் பொதிகள் பிரதேச சபையால் வழங்கப்படவுள்ளது எனவும் தவிசாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ப-222,113)

# நில அளவை திணைக்களமே அபிவிருத்தி தடைப்பட காரணம்

## நானாட்டான் உப தவிசாளர் குற்றச்சாட்டு

மன்னார், செப்.4

நானாட்டான் பிரதேசத்தின் நகர வினைத்திறனுடன் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் தடைப்பட்டமைக்கு மன்னார் மாவட்ட நில அளவைத்திணைக்களமே காரணம் என்று நானாட்டான் பிரதேச சபையின் உப தவிசாளர் லூர்துநாயகம் புவனம் குற்றஞ்சாட்டினார்.

நானாட்டான் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

2019ஆம் ஆண்டு நானாட்டான் பிரதேசத்தை நகர வினைத்திறனுடன் அபிவிருத்தி செய்வதற்கு 60 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. பிரதேச சபையினால் அவற்றுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் முடிக்கப்பட்டு இறுதி வரைபடம் தயாரிப்பதற்காக மன்னார் நில அளவைத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் அதைக் கணக்கில் எடுக்காமல் அசமந்தப் போக்கில் செயற்பட்டமையால் பிரதேச நகர அபிவிருத்தித் திட்டம் இன்னும் ஆரம்பிக்கப்படாமல் உள்ளது. இதற்கான முழுப் பொறுப்பையும் மன்னார் நில அளவைத் திணைக்களமே ஏற்க வேண்டும் - என்றார். (ப-213)

# அரவணைப்பு கடன் வழங்கல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.4

வடக்கில் உள்ள கூட்டுறவு சங்கங்களின் கிராமிய வங்கிகள் ஊடாக அங்கத்தவர்களுக்கு அரவணைப்பு கடன்தொகை வழங்கும் பணிகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக சில மாதங்கள் அனேகமாக கிராமிய வங்கிகளில் இந்தக் கடன் தொகை வழங்கும் பணிகள் பாதிக்கப்பட்டிருந்தன.

தற்போது நிலைமை வழமைக்கு திரும்பியதையடுத்து இந்த அவரணைப்பு கடன் தொகைக்கு விண்ணப்பித்த அங்கத்தவர்களுக்கு கடன் தொகை வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தவர்களாக இணைந்தவர்கள் மட்டுமே இந்த அரவணைப்பு கடன் தொகைக்கு விண்ணப்பிக்க முடியும்.

அங்கத்தவர் ஒருவருக்கு வழங்கப்படும் கடன்தொகை 20 ஆயிரமாக முன்னர் இருந்தது. தற்போது 50 ஆயிரம் ரூபா வரை கடனாக பெற்றுக் கொள்ளமுடியும் என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்தது. (ஜ-17)



இரண்டாயிரம் தென்னங்கன்றுகளை நடுகை செய்யும் திட்டத்தில் திருகோணமலையில் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. மூதூர், சேருவில, வெருகல் பகுதிகளில் உள்ள கூட்டுறவுக் குழுக்களின் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இவை வழங்கப்பட்டன. இளைஞர் அபிவிருத்தி அகத்தின் அமைப்பினால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. (ப)

# போதையில் சாரத்தியம்: 152,500 ரூபா தண்டம்!

சாவகச்சேரி செப். 4

போக்குவரத்து விதிமுறைகளை மீறி மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றால் ஒரு லட்சத்து 52 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் சாரதி அனுமதிப் பத்திரங்களை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

போதையில் வாகனம் செலுத்தியமை, போதையில் காப்புறுதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை உள்ளிட்ட குற்றங்களுக்காகவே அவர்களுக்கு மேற்படி தண்டம் விதிக்கப்பட்டது.

போதையில் காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம் ஆகியவையின்றி வாகனம் செலுத்தியவருக்கு 52 ஆயிரத்து 500 ரூபாவும், மதுபோதையில் காப்புறுதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 50 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபாவும் தண்டமாக விதிக்கப்பட்டது. (ம-9)

# ஹெரோய்னுடன் இருவர் கைது!

ஹெரோய்ன் போதைப்பொருளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கோப்பாயில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய நடவடிக்கையை அடுத்தே அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர். கைதானவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-9)

## திருமலையில்

# 1,109 பட்டதாரிகள் நியமனம் பெற்றனர்

திருகோணமலை, செப்.4

வேலையில்லாப் பட்டதாரிகளுக்கான பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திருகோணமலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலகங்களிலும் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக ஆயிரத்து 171 பேர் இந்த நியமனங்களைப் பெறத் தகுதி பெற்றனர். நேற்றுமுன்தினம் 11 பிரதேச செயலகங்களிலும் ஆயிரத்து 109 பேர் இந்த பயிலுநர் நியமனங்களைப் பெற்று தமக்குரிய பிரதேச செயலகங்களில் அறிக்கையிட்டுள்ளனர் என்று மாவட்டச் செயலர் ஜே.எஸ்.டி.எம். அசங்க அபேவர்தன தெரிவித்தார். இவர்களுக்கான பயிற்சிகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ப)



# பாடசாலையில் ஏற்பட்ட சிக்கல்; மாணவர்கள் கல்வியில் பாதிப்பு

## தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப்.4

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் உள்ள அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் சில வருடங்களாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வடக்கு மாகாணக்கல்வி அமைச்சும், வடமாகாணக் கல்வித் திணைக்களமும் தவறியமையால் இன்று அங்குள்ள குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதோடு ஆசிரியர்களைப் பலரும் அச்சுறுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

இத்தகைய நிலை தொடர்பில் வடக்கு மாகாணக்கல்வி அமைச்சுக்கும், வடமாகாணக் கல்வித் திணைக்களத்திற்கும் பலமுறை தெரியப்படுத்தியும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மாறாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அப் பாடசாலை ஆசிரியர்களைத் தவறாக வழிப்படுத்துவதாக ஒரிருவர் கொடுத்த செய்தியை ஊடகங்கள் சில வெளியிட்டிருக்கின்றமை வேதனையான விடயம். அப்பாடசாலையில் ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சநிலை தொடர்பாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பாடசாலையின் அனைத்து ஆசிரியர்களும் அதில் கையொப்பமிட்டுள்ளனர். இந்த முறைப்பாட்டை ஆசிரியர்கள் மூன்று தடவைகள் வலயக்கல்விப் பணிப்பாளருக்கும், வடக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளருக்கும், வடமாகாணக் கல்விப்பணிப்பாளருக்கும் எழுத்து மூலமாகக் கொடுத்து அனைத்து ஆசிரியர்களும் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்றன. ஆனால் தீர்வுகள் ஏதும் கிடைக்கவில்லை. இதில் முழுக்க முழுக்கத் தவறு விட்டவை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சும், வடமாகாணக்கல்வித்திணைக்களமுமே. இதற்கான தீர்வை கல்வி அமைச்சு முறையாக வழங்காவிட்டால் எதிர்காலத்தில் மாணவர்கள் தாமாக தீர்வைப்பெறும் நிலை ஏற்படும் என்றுள்ளது. (ப)

# நல்லாட்சியின் அரசமைப்பில் சமஷ்டி ஏற்படும் ஆபத்து!

## ஏற்க முடியாது என்கிறார் கம்மன்பில



**கொழும்பு, செப். 4**

**நல்லாட்சி அரசால் உருவாக்கப்பட்ட அரசமைப்பில் நாட்டை சமஷ்டியாக பிரிப்பதற்கான விடயங்கள் உள்ளன. அதனால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'20ஆவது அரசமைப்புத் திருத்தம் அமைச்சரவையில் ஆராயப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தில் 3 வாரத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்படும். நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடனே இது நிறைவேற்றப்படும். இதற்கான நடவடிக்கைகளை அரசு தற்பொழுது மேற்கொண்டுள்ளது. இந்தத் திருத்தத்திற்கு எதிராக எவராவது நீதிமன்றம் சென்றால் மேலும் மூன்று வாரகாலம் செல்லும். புதிய அரசமைப்பை விரிவாக ஆராயாமல் அதை நிறைவேற்ற மாட்டோம். சகல தரப்பினரும் கருத்துக்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் - என்றார். (ம-இ)



இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 154 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி பொது விளையாட்டு அரங்கில் குருதித் தான நிகழ்வு ஒன்று இடம்பெற்றது, அத்தோடு துவிச்சக்கர வண்டிகளுக்கான ஒளியூட்டும் ஸ்டிக்கர்களும் ஒட்டப்பட்டன.

கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்த சந்திரசேகர, கிளிநொச்சி வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் ராகுலன், கிளிநொச்சி வைத்தியசாலையின் மருத்துவர்கள், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், பொலிஸார், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-6)

## மக்கள் சந்திப்புக்களின் போது அமைச்சர்கள் இருக்கவேண்டும்

### ஜனாதிபதி கோத்தாபய உத்தரவு

கொழும்பு, செப். 4

பொதுமக்கள் சந்திப்பு இடம்பெறும் புதன்கிழமைகளில் தமது அமைச்சுக்களில் கட்டாயம் அமைச்சர்கள் இருக்க வேண்டும் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ வலியுறுத்தினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அமைச்சரவை இணைப்பேச்சாளர் ரமேஷ் பத்திரன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுமக்கள் சந்திப்பு இடம்பெறும் புதன்கிழமைகளில் தமது அமைச்சுக்களில் கட்டாயம் அமைச்சர்கள் இருக்க வேண்டும். அத்துடன் இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் அமைச்சுக்களில் இருக்க வேண்டும். மக்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளுக்கு உடனடியாக தீர்வுகளை வழங்க வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார் - என்றார். (ம-இ)

## யாப்பா– நோர்வே தூதுவர் நேற்றுச் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, செப். 4

நாடாளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை இலங்கைக்கான நோர்வே தூதுவர் ட்ரீன யுரன்லி எஸ்கடேல் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

9ஆவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவு செய்யப்பட்டமைக்கு வாழ்த்துக்களை தெரிவித்திருந்ததுடன், நாடாளுமன்ற இராஜதந்திரத்தின் முக்கியத்துவம் தொடர்பில் இவர்கள் கலந்துரையாடியிருந்தனர்.

எதிர்காலத்தில் நாடாளுமன்ற அங்கத்தவர்களின் பகிர்வுகள் தொடர்பான பரஸ்பர நிலைபாடுகளையும் தூதுவரும் சபாநாயகரும் கலந்துரையாடியிருந்தனர்.

முன்னர் ஒஸ்லோ நிலையத்தின் நிகழ்ச்சித்திட்டமொன்றின் அடிப்படையில், இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நோர்வே நாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்து, வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் சந்திப்புகளை மேற்கொண்டிருந்தனர், அதனூடாக கைகோர்த்த செயற்பாடுகளை கட்டியெழுப்புவது தொடர்பில் நோர்வே கொண்டிருக்கும் செயன்முறைகள் பற்றி அறிந்துகொள்ளக் கூடியதாகவும் இருந்தது. பல்வேறு நாடுகளிலிருந்து கிடைக்கும் பிரயோக அனுபவங்களினூடாக கற்றுக்கொள்ளும் பாடங்களின் முக்கியத்துவத்தை தூதுவர் வலியுறுத்தியிருந்ததுடன், வெவ்வேறு நாடாளுமன்றங்களில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் கையாளப்படும் விதம் தொடர்பில் அறிந்திருப்பதன் முக்கியத்துவம் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். (ம-இ)

## சிலாபத்தில் சட்டவிரோதமாக இறால் பண்ணை அமைப்பு!

புத்தளம் பகுதியில் இறால் வளர்ப்புக்காக சதுப்பு நிலத்தை சட்டவிரோதமாக அழித்த விவகாரம் அண்மையில் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில், மேலும் ஒரு சட்டவிரோத இறால் பண்ணை பற்றிய தகவல் வெளியாகியுள்ளது.

சிலாபம், அம்படஹடவில பகுதியில் வெலிஹேன நீரேரி பகுதியில் சதுப்பு நிலங்களை வெட்டி, சட்டவிரோதமாக இறால் பண்ணை அமைக்கும் முயற்சிகள் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. பெரமுன தரப்பிற்காக தீவிர தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட பிரதேசத்தின் முக்கியஸ்தர்கள் குழுவொன்றே இந்த இறால் பண்ணையை அமைப்பதாக பிரதேசவாசிகள் குற்றம்சாட்டியுள்ளனர். பகலில் சதுப்பு நிலங்கள் அழிக்கப்படவில்லை என்றாலும், அவை இரவிலும் பொது விடுமுறை நாள்களிலும் தடையின்றி அழிக்கப்படுகின்றன எனக் கூறப்படுகிறது. இதை எதிர்ப்பவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது என கிராம மக்கள் சுட்டிக்காட்டு கின்றனர். (ம-இ)

## விதிமுரண் வர்த்தகத்தால் வர்த்தகர்களுக்கு வழக்கு

யாழ். மாவட்ட பாவனையாளர்கள் பாதுகாப்பு அதிகார சபையினர் தென்மராட்சி பிரதேசத்தில் அண்மையில் நடத்திய திடீர் பரிசோதனைகளில் விதிமுரண் வர்த்தகத்தில் ஈடுபட்ட 12 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

பொருள்களின் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை, காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்தமை ஆகிய குற்றங்களுக்காகவே அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. பொருள்களின் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமைக்காக 5 வர்த்தகர்களுக்கு எதிராகவும் காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்தமைக்காக 7 வர்த்தகர்களுக்கு எதிராகவும் வழக்குத் தொடரப்பட்டது. (ம-9)

## ஈ.பி.எவ். விவரங்கள் குறுந்தகவல்களில்!

கொழும்பு, செப். 4

ஊழியர் சேமலாப நிதியின் தற்போதைய மிகுதியையும் அதுதொடர்பான தகவல்களையும் பயனாளிகளின் அலைபேசிகளுக்குக் குறுந்தகவலாக மாதாந்தம் அனுப்பும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொழில் திணைக்கள ஆணையாளர் ஏ.விமலவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டையை உள்ளீர்த்து, தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் செயற்படுத்தப்பட்டு வந்த திட்டம் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஊழியர் சேமலாப நிதியின் தற்போதைய இருப்பு தொடர்பான தகவல்களை, மாதாந்தம் தத்தமது அலைபேசிக்குக் குறுந்தகவலாக அனுப்பும் வேலைத்திட்டத்துக்கான நடவடிக்கைகள் தயார் நிலையில் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் 'பி' அட்டை இல்லாத சந்தர்ப்பத்திலும் ஊழியர் சேமலாப நிதியை இதன்மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-இ)

## சேதமடைந்த வடிகாலை சீரமைக்க கோரிக்கை

சாவகச்சேரி, செப் 4.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட தனன்களப்பு வீதியில் சேதமடைந்து காணப்படும் வடிகாலைச் சீரமைப்புச் செய்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

தனங்களப்பு வீதி ஊடாக சாவகச்சேரி நகருக்குள் நுழைவதற்கு முன்பாக தண்டவாளத்திலிருந்து இந்து மயானம் வரை நகரசபையினால் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள வடிகால் மழை வெள்ளத்தில் சேதமடைந்து காணப்படுகின்றது. இரவு வேளைகளில் வாகனங்களில் பயணிப்போர் வீதியைவிட்டு சற்று வீதியோரமாகச் செல்லும்போது இந்த வடிகாலுக்குள் வீழ்ந்து பாதிப்புக்கு உள்ளாகின்றனர். எனவே வீதியைப் பயன்படுத்தும் மாணவர்கள் உட்பட பொதுமக்களின் நலனில் அக்கறை கொண்டு இன்னல்களைத் தவிர்க்கும் வகையில் சம்பந்தப்பட்டவர்கள் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள வடிகாலை நிரந்தரமாக அமைத்துத்தர வேண்டும் என்றனர்.

"சாவகச்சேரி நகரிலிருந்து ஏ32 வீதியுடன் இணையும் தனன்களப்பு வீதி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் எல்லைக்குட்பட்டது. பொதுமக்கள் நலன் கருதி நிரந்தர வடிகால் அமைத்து வழங்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது" என்று சாவகச்சேரி நகரசபையினர் தெரிவித்தனர். (ப-9)

## பொதுக்கூட்டம்

கொழும்புத்துறை,செப்.4

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் மகா சபை பொதுக்கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (ஜ-17)

# இன்றைய நாள்

**மேடம்:** உங்களின் நல்ல செயலை சிலர் கேலி பேசுவர். நம்பிக்கையுடன் செயல்படுவது அவசியமாகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய யுக்தியை கையாள்வீர்கள். சீரான அளவில் பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** எதிரான சூழ்நிலை நிலவினாலும் மனசாட்சியுடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருகிற குளறுபடியை மாற்று உபாயத்தால் சரிசெய்வது நல்லது.

**மிதுனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணிகளில் நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திட்டமிட்ட இலக்கை எட்டும்.

**கடகம்:** பேச்சு, செயலில் தயக்கம் ஏற்படலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீரான அளவில் இருக்கும். அதிக நிபந்தனையுடன் கடன் பெற வேண்டாம். விஷப்பிராணிகளிடம் இருந்து விலகுவது நல்லது.

**சிம்மம்:** மதிநுட்பத்துடன் செயல்படுவீர்கள். முயற்சிகளுக்கான பலன் திருப்திகரமாக கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்கும். சமூகத்தில் தனி அந்தஸ்தை பெறுவீர்கள். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**கன்னி:** சொந்த விஷயங்களை பற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். தெய்வ அனுகூலத்தால் நினைத்த செயல்கள் அனைத்தும் நிறைவேறும். சிக்கனமாகச் செலவு செய்வீர்கள்.

**துலாம்:** சிலருக்கு சரியான நேரத்தில் உதவிசெய்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்கத் தேவையான மாற்றத்தை செய்வது நல்லது. பணவரவுடன் நன்மையும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** செயல்கள் அனைத்திலும் நேர்த்தி காணப்படும். குடும்பத்தினரால் பாராட்டும் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் முன்னேற்றகரமான பலன் உண்டு.

**தனுசு:** வெளிவட்டார தொடர்பு தொந்தரவு தரலாம். எந்தச் செயலிலும் பொறுமை அவசியம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் பயனளிக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** மாற்று கருத்து உடையவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க கிடைக்கும் வாய்ப்பை சரியாக பயன்படுத்துவீர்கள். சிக்கனம் சிரமத்தை தவிர்க்க உதவும்.

**கும்பம்:** செயல்களில் இரக்க குணம் வெளிப்படும். பிறருக்கு உதவுவதை விருப்பமாகக் கொள்வீர்கள். உபரி வருமானம் கிடைக்கும்.

**மீனம்:** புதியவர்களின் நட்பு கிடைக்கும். தாமதமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி திட்டமிட்டபடி நிறைவேறும்.

ஒரு லட்சம் வேலைவாய்ப்பில்

# வடக்கு, கிழக்கு மக்கள் புறக்கணிக்கப்படார்!

## டக்ளஸிடம் ஜனாதிபதி, பிரதமர் உறுதியளிப்பு

கொழும்பு, செப்.4

ஒரு இலட்சம் வேலை வாய்ப்பில் வடக்கு, கிழக்கு புறக்கணிக்கப் படமாட்டாது என்றும் குறித்த பிரதேசங்களுக்கான ஒதுக்கீடு உரிய முறையில் விரைவில் வழங்கப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் உறுதியளித்துள்ளனர். ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்த விடயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையிலேயே ஜனாதிபதி மற்றும் பிரதமரினால் இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வாக்குறுதிக்கமைய நாடளாவிய ரீதியில் வறிய குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் அரசாங்க வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் செயற்றிட்டம் வடக்கு, கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பிரதேசங்களில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தின்போது பிரஸ்தாபித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாட்டின் ஏனைய பிரதேச மக்களைப் போன்று வடக்கு, கிழக்கு மக்களும் ஒரு இலட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தின் பலாபலன்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதில் இந்த அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது என்ற அடிப்படையில் எந்தவகையான பிரதேச, இன, மத ரீதியான பாகுபாடுகள் தலைதூக்கவும் இடமளிக்கப்படமாட்டா என்பதை வலியுறுத்தியதுடன் ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு தற்போது ஒரு சில காரணங்களுக்காக தற்காலிகமாக தடுத்து நிறுத்தப்பட்ட போதிலும் விரைவில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும் எனவும் அந்தப் பிரதேச மக்கள் தேவையற்ற வகையில் குழப்பமடையத் தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளனர். (ற)

## மன்னாரில் விசேட கருத்தமர்வு



மன்னார், செப்.4

மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில், இளையோர் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களை ஒன்றிணைத்து சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவது தொடர்பான விசேட கருத்தமர்வு நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயத்தில் இடம்பெற்றது. இந்த விசேட கருத்தமர்வானது கரித்தாஸ் வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்தந்தை செ.அன்ரன் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கருத்தமர்வின் முக்கியமான இலக்கு கிராமங்களில் எதிர்கொள்கின்ற சவால்களைக் கண்டறிந்து, அவற்றை கிராம மட்டத்தில் காணப்படுகின்ற அமைப்புகளின் ஊடாக உரிய அதிகாரிகளுக்கு தெரிவித்தலும், அவற்றை தீர்ப்பதற்கான வழி முறைகளை மேற்கொள்வதுமாகும்.

இதன்போது, தலைமைத்துவத்தைக் கொண்டு செல்வதற்கு எவ்வாறான பண்புகள் காணப்பட வேண்டும் எனவும், தொடர்ந்து பிராந்திய மட்டத்தில் செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்கு இளைஞர் யுவதிகள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களை ஒன்றிணைத்து பிராந்திய மட்டக்குழு உருவாக்கப்பட்டு இவர்களை வலுப்படுத்துவதற்கான குழுச் செயற்பாடுகளும் இடம்பெற்றன. (ற-5)





ஆவணிப் பூரணை தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம், நல்லையம்பதி அருள்மிகு சிங்கார வேலன் சிவகாயத்திரி அம்பாள் சுந்தர சுவர்க்க வாயில் சந்நிதானத்தில் விளக்கு பூஜை இடம் பெற்றபோது....

படங்கள் : ஐ. சிவசாந்தன்

## ஹெரோய்ன் நுகர்ந்தோர் கைது

யாழ்ப்பாணம், செப். 3

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு பகுதியில் ஹெரோயினை நுகர்ந்த குற்றச்சாட்டில் 5பேரை நேற்று இரவு கைதுசெய்துள்ளோம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில் கிழக்கில் உள்ள ஆலய வளாகத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் இளைஞர்கள் கூடி நிற்கின்றனர் என கோப்பாய் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது. அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது அவர்கள் ஹெரோய்ன் நுகர்ந்தமை கண்டறிந்ததாகவும், அவர்களிடமிருந்து 210 மில்லி கிராம் ஹெரோய்னையும் கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5,20)

## பசுமாடு கையளிப்பு

கொடிகாமம், செப்.4

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை நலன்புரி சங்கத்திடம் பசுமாடு ஒன்று நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது. கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை விடுதியிலுள்ள வசதி குறைந்த போசாக்கற்ற நோயாளர்களுக்கு பசும்பால் வழங்குவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியுதவியை தென்மராட்சி அபிவிருத்தி கழகத்தின் ஆஸ்திரேலியக் கிளையினர் வழங்கியுள்ளனர். (வ-159)



### ரணிலின் தலைமையின் கீழ்

# 75 ஆவது ஆண்டுக்குள் நுழைகிறது ஐ.தே.க.!

**கொழும்பு, செப்.4**
**நீண்டதொரு அரசியல் வரலாற்றைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் தன்னுடைய 75ஆவது ஆண்டில் காலடி வைக்கவுள்ளது.**

ஐ.தே.க எதிர்வரும் 6ஆம் திகதி 74ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடவுள்ளது. சிறிகொத்தாவில் இதற்கான சர்வ மத வழிபாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஐ.தே.கவின் தலைவராக 1994 ஆம் ஆண்டு முதல் 26 வருடங்கள் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் செயற்படும் நிலையில் சமீபகாலமாக கட்சிக்கு ஏற்பட்டுள்ள பெரும் பின்னடைவுகளை அடுத்து இம்முறை தலைமைப்பதவியில் மாற்றம் ஏற்படுவது உறுதியென ஐ.தே.க. உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். ஐ.தே.கவின் புதிய தலைவர் யார் என்பது தொடர்பில் நாளை நடைபெறவுள்ள கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.
1946 ஆம் ஆண்டு டி.எஸ். சேனாநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி 1947 முதல் 2020 வரை இலங்கையில் நடைபெற்றுள்ள 16 நாடாளுமன்றத் தேர்தல்களில் 8 இல் வெற்றி பெற்று ஆட்சியமைத்துள்ளது.
அத்துடன், 8 ஜனாதிபதி தேர்தல்களில் மூன்றில் வெற்றிவாகை சூடியுள்ளது. இலங்கையில் 4 நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள் மற்றும் 7 பிரதமர்களை ஐ.தே.க உருவாக்கியுள்ளது. எனினும், நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வரலாறு காணாத பின்னடைவு ஏற்பட்டது. வாக்களிப்புமூலம் ஒரு உறுப்பினர் கூட ஐ.தே.கவிலிருந்து தெரிவாகவில்லை. தேசியப்பட்டியல் ஊடாகவே ஓர் ஆசனம் கிடைக்கப்பெற்றது.
அந்த ஆசனத்தை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பிலும் கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இதனால் 74 ஆண்டுகளுக்கு பிறகு ஐக்கிய தேசியக் கட்சியின் பங்குபற்றல் இல்லாமல் நாடாளுமன்றம்கூடிய வரலாற்று சம்பவமும் கடந்த 20ஆம் திகதி பதிவானது. (வ-44)



## கிழக்கு ஆளுநர் பிரதமர் சந்திப்பு

திருகோணமலை, செப்.4
கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கிடையே நேற்றுமுன்தினம் புதன்கிழமை அலரி மாளிகையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. கிழக்கு மாகாணத்தின் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பில் ஆளுநரினால் இதன்போது பிரதமருக்கும் தெளிவுபடுத்தப்பட்டதுடன், கிழக்கு மாகாண அபிவிருத்தி செயற்பாடுகளை விரைவுபடுத்துவதற்குத் தேவையான எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.
இயற்கை அழகுமிகு கிழக்கு மாகாணத்தில் சுற்றாடல் துறையை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துள்ள தொல்பொருள் பாரம்பரியத்தை பாதுகாப்பது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. இந்தச் சந்திப்பில் பிரதமரின் செயலாளர் காமினி செனரத்தும் கலந்து கொண்டார். (ந)

## ஜனநாயகத்தை இல்லாதொழிக்க சதி

### ராஜித சுட்டிக்காட்டு



கொழும்பு,செப்.4
நாட்டில் ஜனநாயகத்தை இல்லாதொழிக்க முற்படக்கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
19 ஆவது திருத்தச் சட்டம் நாட்டுக்குத் தேவையான ஒன்றாகும்.
அதில் உள்ள குறைபாடுகளை நீக்கவே நாம் முற்பட வேண்டும். இதனைச் செய்யாமல், அதில் உள்ள ஜனநாயகத்தை இல்லாதொழிக்க முற்படக்கூடாது. நாம் 19 ஆவது திருத்தச்சட்டத்தைப் பாதுகாக்கவே நாம் முயற்சிக்கிறோம். இதன் ஊடாக அரசு பலமடைந்துள்ளது என்று தான் கூறவேண்டும்.
இப்படியான ஒரு திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க முற்படுவது சர்வாதிகார ஆட்சிக்கு வழிகோலுவதாகவே அமைந்துள்ளது- என்றார்.



இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 154ஆவது ஆண்டு நிறைவையொட்டி மரநடுகை நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந் நிகழ்வு வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பீ.ஆர்.மானவடுவின் தலைமையில் வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.
நிகழ்வில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திசாலடி சில்வா கலந்து கொண்டு பாடசாலை வளாகத்தில் பயன்தரு மரங்களை நட்டு வைத்தார். (வ-18)

## காலபோக பயிர்ச்செய்கை கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.4
இருபாலை தெற்கு விவசாய சம்மேளனத்தின் காலபோக பயிர்ச் செய்கை தொடர்பான கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணியவில் இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. சம்மேளனத் தலைவர் த.தர்ஷன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது . (வ)





இலங்கையின் சின்னக் கதிர்காமம் எனப் போற்றப்படும் மட்டக்களப்பு மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தின் தீர்த்தோற்சவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. நேற்றுக் காலை முருகப்பெருமானுக்கு விசேட பூஜைகள் நடைபெற்று, தங்க வேல் தாங்கிய பேழை மட்டக்களப்பு வாவிக்கரைக்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு நடைபெற்ற விசேட பூஜையைத் தொடர்ந்து தீர்த்தோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. (ந-46)





35 ஆண்டுகளுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.ஆலாலசுந்தரம், வி. தர்மலிங்கம் ஆகியோரின் நினைவுதினம் தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயத்தில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது.

## கூகுளில் இலங்கையர்கள் அதிகம் தேடியது என்ன?

கொழும்பு, செப். 4
2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் கூகுளில் 'செக்ஸ்' என்ற வார்த்தையை அதிகம் தேடிய 10 நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தைப் பிடித்தது. முதலிடத்தில் எதியோப்பியா உள்ளது. கூகுளின் ஆண்டு அறிக்கையின்படி, 2019ஆம் ஆண்டில் 'செக்ஸ்' என்ற சொல்லைத் தேடிய நாடுகளின் பட்டியலில் இலங்கை மூன்றாவது இடத்தில் இருந்தது. ஆனாலும், 2012ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகளாக 'செக்ஸ்' என்ற வார்த்தையைக் கூகுளில் தேடிய பட்டியலில் இலங்கை முதலிடத்தில் இருந்தது. 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் 'செக்ஸ்' என்ற வார்த்தையை அதிகம் தேடிய மாகாணமாக வட மத்திய மாகாணம் உள்ளது. இரண்டாவது இடத்தில் ஊவா மாகாணமும், மூன்றாவது இடத்தில் வடக்கு மாகாணமும், நான்காவது இடத்தில் கிழக்கு மாகாணமும் உள்ளன. (ஜ,5)

# வவுனியா மக்களுக்கு புதிய ரயில் கடவை

## கலந்துரையாடலில் இணக்கம்



வவுனியா,செப்.4

வவுனியா பன்றிக்கெய்தகுளம் பகுதியில் அமைந்துள்ள ரயில் கடவையை மூடி, அதற்கு அருகில் புதிய ரயில் கடவை ஒன்றை அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

பன்றிக்கெய்தகுளம் பகுதியில் அமைந்துள்ள ரயில் கடவை சட்டவிரோதமானது என்றும், அப்பகுதியில் தம்மால் கடவை எவையும், அமைக்கப்படவில்லை என்றும் ரயில்வே திணைக்களம் தெரிவித்து வந்ததுடன், இந்த ரயில் கடவையூடான போக்குவரத்தையும் தடைசெய்திருந்தது. எனினும் பொதுமக்கள் விடுத்த கோரிக்கைகளுக்கு அமைய பயணத்தடை விலத்திக்கொள்ளப்பட்ட நிலையில் நேற்று புதன்கிழமை மீண்டும் குறித்த பாதையை மூடுவதற்காக ரயில் திணைக்கள அலுவலர்கள் வருகைதந்திருந்தனர்.

இதனையடுத்து இவ் விடயம் தொடர்பில் ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் கலந்துரையாடல் ஒன்று நேற்றையதினமே இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் ரயில்வே திணைக்கள அலுவலர்கள், ஓமந்தை பொலிஸார், தெற்கு பிரதேசசபை தவிசாளர் து.நடராஜசிங்கம் , பிரதேசசபை உறுப்பினர்களான கோ.அஞ்சலா, பூ.சந்திரபத்மன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் , நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் மற்றும் அப்பகுதி மக்கள் கலந்துகொண்டனர். தற்போது பொதுமக்களின் பயன்பாட்டிலிருக்கும் ரயில்வே கடவையை மூடி அதற்கு அருகில் புதிய ரயில்வே கடவை ஒன்றை அமைப்பதற்கு கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டது. மேலும் புதிய பாதை அமைக்கும்வரை தற்போது பாவனையில் உள்ள பாதையை மக்கள் பாவனைக்காக விடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதேவேளை புதிய கடவைக்கான வீதி அமைக்கும் பணிகள் நேற்றைய தினம் ஆரம்பிக்க விருந்தன. (ந-110)





## கொரோனா விழிப்புணர்வு செயலமர்வு

கரணவாய், செப்.4

கொரோனா நோய்த் தடுப்புத் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் ஏற்பாட்டில் கல்லூரியின் பிரதி அதிபர் த.விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற இச் செயலமர்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் கே.பாலகிருஷ்ணன், செஞ்சிலுவைச் சங்க நிறைவேற்று அலுவலர் எஸ்.பிரகாஷ், முதலுதவி பயிற்றுவிப்பாளர் கே.லிங்கேஸ்வரன் மற்றும் கரவெட்டி சுகாதாரப் பணிமனையைச் சேர்ந்த பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர். இதில் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு பயன்பெற்றனர். செயலமர்வின் இறுதியில் மாணவர்களுக்கான செஞ்சிலுவைச்சங்கத்தின் சீருடைகளும் கொரோனா பாதுகாப்பு உபகரணத்தொகுதியும் முதலுதவிப் பொருள்களும் கல்லூரிக்கு வழங்கப்பட்டன. (வ-108)



## அடிக்கல் நடுகை

வவுனியா, செப்.4

வவுனியா பாவற்குளம் அல் அமீன் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சுமார் 1.5 கோடி ரூபாய் செலவில் புதிய இரண்டு மாடி வகுப்பறை கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் பாடசாலை வளாகத்தில் பாடசாலை அதிபர் ஜனாப். எஸ்.புகாரி தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார். இக் கட்டடம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் வேண்டுகோளில் குவைத் நாட்டின் அல் ஹிமா இஸ்லாமிய சேவைகள் அமைப்பின் நிதி உதவியுடன் அமைக்கப்படவுள்ளது. (வ-222)



காணாமல் ஆக்கப்பட்ட

## சர்வதேச பட்டியலில் ஊடகவியலாளர் பிரகீத்

கொழும்பு,செப்.4


உலகளாவிய ரீதியில் இதுவரையில் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களில் உடனடிக் கவனம் செலுத்தப்பட வேண்டியவர்களை உள்ளடக்கி சர்வதேச பட்டியலில், இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் பெயர் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு '10 மோஸ்ட் ஏர்ஜென்ட்' என்ற தலைப்பில் பத்திரிகைச் சுதந்திரம் முற்றிலும் கேள்விக்குள்ளாக்கப்பட்டு அடக்குமுறையை அனுபவித்துவரும் நீதியைக் கோரும் 10 ஊடகவியலாளர்களை உள்ளடக்கிய பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

'சுதந்திர பத்திரிகையாளர் கூட்டணி' என்ற அமைப்பு இதனை வெளியிட்டுள்ளது.

வெளியிடப்பட்ட பட்டியலில் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்ட இலங்கை ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் பெயர் முதலிடத்தில் உள்ளது.

இந்தப் பட்டியல், உலகளாவிய ரீதியில் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் மீதே அதன் கவனத்தைக் குவித்திருக்கிறது. ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழுவினால் வெளியிடப்பட்டிருக்கும் அண்மைய கா[illegible] பட்டி உலகளாவிய ரீதியில் 64 ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)



மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில்

## அவசர சிகிச்சைப் பிரிவு திறப்பு

யாழ்ப்பாணம், செப்.4

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் மருத்துவர் சற்குணராஜா விடுதி ஆகியன கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

வைத்தியசாலையின் தலைவர் மா.ஞானேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் ஆர்.சுரேந்திரகுமாரன், அவசர சிகிச்சைப் பிரிவு வைத்திய நிபுணர்களான மருத்துவர் எம். லக்ஸ்மன் மற்றும் மருத்துவர் எல். டயனோஜினி, உப தலைவர் அ.மனுநீதி , செயலாளர் க.செல்வராசா, பொருளாளர் அ.கிருஷ்ணமூர்த்தி, பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள், வைத்தியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். இச் சிகிச்சைப் பிரிவுக்கான உபகரணங்களை லண்டன் காரைநகர் அபிவிருத்தி சபை நன்கொடையாக வழங்கி யுள்ளது.

அத்துடன் இச் சிகிச்சைப்பிரி விற்கான வைத்தியர்கள் தங்கி நின்று வைத்திய சேவையை வழங்குவதற்காக மருத்துவர் சற்குணராஜா விடுதி கனடா ஐ.எம்.எச்.ஒ நிறுவனத்தின் நிதியுதவியுடன் மீள புனரமைக் கப்பட்டுள்ளது. (ந-5)

## சீரற்ற காலநிலை: மக்களுக்கு நிவாரணம்

கொழும்பு, செப்.4

சீரற்ற காலநிலை காரணமாக அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ள ஒன்பது மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க மூன்று மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். இந் நடவடிக்கை மாவட்டச் செயலாளர்கள் ஊடாக மேற்கொள்ளப்பட உள்ளது என உள்நாட்டு அலுவல்கள், பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் கிறிஸ்டி லால் பிரனாந்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை அனர்த்தம் சம்பந்தமாக பொதுமக்கள் தகவல்களை அறிவிப்பதற்கு 117 என்ற விசேட தொலைபேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ந-இ)

## மாணவிகள் வன்புணர்வு: காவலாளி கைதானார்!

கொழும்பு, செப். 4

5ஆம் தரத்தில் கல்வி கற்கும் மூன்று மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் பாடசாலை காவலாளி கைது செய்யப்பட்டுள்ளார்.

39 வயதுடைய நபரே இவ்வாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் குறித்த மாணவிகளின் பெற்றோர்களிடம் வாக்குமூலம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-இ)

# ‘20’ அரசமைப்புக்கு முரண் என்றால் உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்!

*மாற்றுக்கொள்கைக்கான மத்திய நிலையத்தின் தலைவர் சுட்டிக்காட்டு*

கொழும்பு, செப். 4

**அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு ஜனநாயகத்துக்கு – அரசமைப்புக்கு விரோதமாக இருக்கும்பட்சத்தில் அதற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று மாற்றுக்கொள்கைக்கான மத்திய நிலையத்தின் தலைவர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து நேற்று தெரிவித்தார்.**

அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தை மாற்றியமைப்பதற்கான 20ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு அமைச்சரவை நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியது. இது தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

‘அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைவு இன்னும் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை. அவ்வாறு வெளியிடப்பட்ட பின்னர் அதிலுள்ள விடயங்களை ஆராய்ந்த பின்னரே எமது நிலைப்பாட்டை உறுதியான வகையில் அறிவிக்கமுடியும். எனினும், அரசமைப்பை மீறும் விதத்தில் 20 அமைந்தால் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்படும். சுயாதீன ஆணைக்குழுக்கள் எல்லாம் இருக்கவேண்டும் என்பதே எமது கருத்து–என்றார். (ஒ,5,44)

## வவுனியாவில் முன்பள்ளி மீளுருவாக்க பணிகள் ஆரம்பம்

வவுனியா, செப்.4

கொரனா அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டிருந்த வவுனியா வடக்கு முன்பள்ளிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் மீளவும் இயங்கத்தொடங்கியுள்ளது.

இந்த நிலையில் ‘சுகாதாரத்துடன் கூடிய கல்வி’ என்னும் நிலை இன்றியமையாததொன்றாக கருதப்படும் நிலையில், இந்தக் கருதுகோளுக்கு முன்னுரிமை அளித்து முன்பள்ளிகள் இயங்கும் வகையில், கடந்த திங்கட்கிழமை அன்று வவுனியா வடக்கின் 46 முன்பள்ளிகளுக்கு ‘கை கழுவும் நிலையம் அமைப்போம்’ எனும் செயற்திட்டத்தின் கீழ், 46 கைகழுவும் உபகரணங்கள் றகமா நிறுவனத்தினால் வழங்கப்பட்டன. றகமா நிறுவனம் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் வவுனியா வடக்கு பகுதிகளில் முன்பள்ளி ஒன்றியத்துடன் இணைந்து முன்பள்ளி சிறுவர் அபிவிருத்திச் செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. (ற-110)



## 20ஆம் திருத்தம் தொடர்பில் சஜித் அணியும் போர்க்கொடி

*அடுத்த கட்டம் பற்றி தீவிர ஆலோசனை!!*

கொழும்பு, செப். 4

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைவு, சுயாதீன ஆணைக்குழுக்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. இது தவறான நடவடிக்கையாகும்.



இதற்கு எதிராக முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தற்போது ஆராய்ந்து வருகின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: 20ஆவது திருத்தச்சட்ட வரைவானது நாட்டு மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக அவசர அவசரமாக கொண்டுவரப்பட்ட சட்ட வரைவு அல்ல. அது அரசியல் நோக்கம் கொண்டது.

நாட்டில் ஜனநாயகம் பலப்படுத்தப்படவேண்டும், அரச சேவைகள் சுயாதீனமாக இடம்பெற வேண்டும் என கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்தமையாலேயே 19ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. ஜனநாயகமும் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் சுயாதீன ஆணைக்குழுக்களை நீக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள முடிவு தவறானதாகும். புதிய பெயரில் குழுக்கள் அமைக்கப்பட்டு அரச சேவை அழுத்தங்களுக்கு மத்தியில் அரசியல் மயப்படுத்தப்படலாம். இதனை நாம் எதிர்க்கின்றோம்.

அடுத்ததாக இரட்டை பிரஜாவுரிமை உடையவர்கள் நாடாளுமன்றம் செல்லமுடியாது என்ற விடயமும் மாற்றப்பட்டுள்ளது. இது நாட்டுக்கு பெரும் அச்சுறுத்தலாகும். இரட்டை பிரஜா உரிமை உடையவர்கள் நாடாளுமன்றம் வரமுடியாது என 19 இல் இருந்தது.

இதனை மேலும் பலப்படுத்தி பிரதேச சபைக்குகூட செல்லமுடியாது, உயர் பதவிகளை மற்றும் வெளிநாட்டு தூதுவர் பதவிகளை வகிப்பவர்கள் இரட்டை குடியுரிமையை கொண்டிருக்கக்கூடாது என மாற்றியமைக்கப்பட்டிருக்க வேண்டும். அதனை செய்யாமல் நீக்கியுள்ளனர்.

இவற்றை எம்மால் சவாலுக்குட்படுத்த முடியும். 20 தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். கட்சித் தலைவர் தலைமையில் ஆய்வுகள் இடம்பெற்றுவருகின்றன. விரைவில் எமது நிலைப்பாடு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும், என்றார் திஸ்ஸ அத்தநாயக்க. (ஒ,5,44)

## கண்டி மாவட்ட வாக்குகளை மீளவும் எண்ணக் கோரி மனு!

கொழும்பு, செப். 4

கடந்த பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகள் அனைத்தையும் மீள எண்ண உத்தரவிடக் கோரி ‘மஹாசன் பாலகய’ இயக்கத்தின் தலைவர் அமித் வீரசிங்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். நேற்றுமுன்தினம் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. அமித் வீரசிங்க கண்டி மாவட்டத்தில் ‘சுயேச்சைக் குழு 1’ இல் போட்டியிட்டிருந்தார். (ஒ,5)

இன, மத வெறுப்புப் பரப்புரை

## விக்கிக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

### கடவுச்சீட்டையும் பறிக்கக் கோரிக்கை

கொழும்பு, செப். 4

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன் மீது சட்டநடவடிக்கை எடுக்க வேண்டுமென, சட்டத்தரணி தர்சன வெரதுவேஜ் பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். சமூகங்களிடையே இன அல்லது மத வெறுப்பைத் தூண்டும் வகையில் ஊடகங்களுக்கு அறிக்கைகளை வழங்கியதற்காக விக்னேஸ்வரன் மீது அவர் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். ஓகஸ்ட் 30ஆம் திகதி அன்று இரண்டு தனியார் தொலைக்காட்சிகள் ஒளிபரப்பிய நிகழ்ச்சிகளின் மூலம் விக்னேஸ்வரன் மோசமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார் என தர்சன வெரதுவேஜ் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல என்று விக்னேஸ்வரன் கூறியுள்ளார் என அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். ஓய்வு பெற்ற நீதியரசரான விக்னேஸ்வரன் இலங்கை இராணுவத்துக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளார் எனவும், வடக்கு மாகாணத்தில் புத்தர் சிலைகள் தன்னிச்சையாக நிறுவப்படுகின்றன எனக் கூறி விக்னேஸ்வரனும் ஓர் அறிக்கையை வெளியிட்டார் எனவும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை (ஐ.சி.சி.பி.ஆர்) சட்டம் எண் 3 (1) இன் கீழ், 2007 இன் 56, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 2 (1) (எச்) மற்றும் தண்டனைச் சட்டத்தின் 120 மற்றும் 290 (பி) பிரிவுகளின் கீழ் விக்னேஸ்வரன் தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்துள்ளார் என அவர் குறிப்பிட்டுள்ளார். விக்னேஸ்வரனுக்கு எதிராக உடனடியாக விசாரணையைத் தொடங்கவும், அவரது கடவுச்சீட்டை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கும்படியும் அவர் முறைப்பாடு தெரிவித்துள்ளார். (ஒ,5)



சென்ற வருட பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 7 லட்சத்து 85ஆயிரம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் ஒலிபெருக்கி போன்ற சாதனங்கள் வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 5 பொது அமைப்புகளுக்கு நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தானால் அவ் வமைப்புகளுக்கு கையளிக்கப்பட்டன. (ந-222)

## இளைஞன் சடலமாக மீட்பு

வவுனியா, செப். 4

வவுனியா கூமாங்குளம் பிரதான வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் இருந்து இளைஞனின் சடலத்தைப் பொலிஸார் நேற்றுக் காலை மீட்டுள்ளனர். தங்கவேல் சிவகுமார் (வயது26) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தந்தையுடன் இளைஞனும் வீட்டில் இருந்துள்ளார். தந்தை காலை 7 மணியளவில் தொழில் நிமித்தம் வெளியில் சென்றுள்ளனர். 8 மணியளவில் இளைஞனின் சகோதரன் வீட்டுக்கு வந்துள்ளார். வீட்டில் இளைஞன் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக இருந்ததை அவதானித்துள்ளார். உடனடியாகப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.5)

# எரிகின்றது எண்ணெய்க் கப்பல் 19 பேர் கடற்படையினரால் மீட்பு

**அம்பாறை சங்கமன் கந்தை கடற்பரப்பிலிருந்து 38 கடல் மைல் தொலைவில் எரிபொருளை ஏற்றிச் சென்ற கப்பலில் தீ விபத்து ஏற்பட்டுபற்றிளரிந்துகொண்டிருக்கின்றதுஎன்றுதெரிவிக்கப்படுகின்றது. அந்தக் கப்பலிலிருந்து ஒருவர் எரிகாயங்களுடன் மீட்கப்பட்டு அம்பாறை மாவட்டம் கல்முனை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.**

மற்றொரு மாலுமி உட்பட 18 ஊழியர்கள் வேறு ஒரு கப்பல் மூலமாக காப்பாற்றப்பட்டுள்ளனர் என்று கடற்படை தெரிவித்தது.

எம்டி நியூ டயமண்ட் என்ற அந்தக் கப்பலில் 23 பேர் உள்ளனர். அவர்களை மீட்க, திருகோணமலை கடற்படைத் தளத்திலிருந்து இரண்டு கப்பல்களும், ஹம்பாந்தோட்டை கடற்படைத் தளத்திலிருந்து ஒரு கப்பலும் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தன.



தீ பற்றியிருந்த கப்பல் பனாமாவைச் சேர்ந்தது. இந்தியாவுக்குச் செல்லும் வழியில் விபத்தை சந்தித்துள்ளது. கப்பலை கண்காணிக்க இலங்கை விமானப்படையின் பி 200 பீச் கிராப்ட் விமானம் அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. தீக்காயங்களுக்கு உள்ளான அவர் வேதனையில் கதறினார் என்றும் எனினும், கொரோனா அச்சம் காரணமாக அவர் பாதுகாப்பாக மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(கு-ஐ)

## நிரந்தர நியமனம் வழங்குமாறு சிற்றூழியர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.4

கடந்த ஆட்சிக் காலத்தல் சுகாதார சிற்றூழியர்களாக நியமனம் வழங்கப்பட்டும் அந்த தொழில்வாய்ப்பில் உள்வாங்கப்படாது ஏமாற்றமடைந்த அவர்கள் தமது நியமனத்தை உறுதி செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

நீண்டகாலமாக சுகாதார சிற்றூழியர்களாகப் பணிபுரிந்து வரும் நிலையில் கடந்த ஆட்சிக் காலத்தில் தமக்கு நியமனம் வழங்கப்படுவதாகக் கூறி நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் அந்த நியமனங்க ளில் பல்வேறு குளறுபடிகள் இருந்தமை தொடர்பில் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து அந்த நியமனங்கள் நிறுத்தப்பட்டன. இதனால் நீண்ட காலமாக சேவையை புரிந்து வந்த பல சிற்றூழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அக்காலப்பகுதியில் எமது குடும்ப வறுமையால் எமக்கு சமுர்த்தி நிவாரண முத்திரை வழங்கப்பட்டிருந்தது. எனினும் நியமனத்துக்கான கடிதங்கள் கிடைத்தமையைக் காரணம் காட்டி சமுர்த்தி உதவித் திட்டமும் நிறுத்தப்பட்டுள்ளது . எனவே எமக்கான நிரந்தர நியமனத்தை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு வருகை தந்திருந்த சிற்றூழிய ர்கள் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட உதவி நிர்வாகச் செயலாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரனைச் சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

(ஐ)

## தேங்காய்களினுள் ஹெரோய்ன்

கொழும்பு, செப்.4

ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் தெற்கு அதிவேக நெடுச்சாலையின் பின்னதுவ வெளியேற்றத்தில் வைத்து ஐவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து ஐந்நூறு கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது என மொரகஹஹேன பொலிஸார் தெரிவித்தனர்.

தேங்காய்களினுள் மறைத்து வைத்திருந்த நிலையில் ஹெரோய்ன் கண்டுபிடிக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ஐ-இ)

## முன்பள்ளிகளில் சுகாதார நடைமுறை பேணப்பட வேண்டும்

### யாழ். மாநகர அதிகாரிகள் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப்.4

யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தில் உள்ள சகல முன்பள்ளி நிலையங்களிலும் கண்டிப்பாக சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சகல முன்பள்ளி நிலையங்களும் கடந்த 2 ஆம் திகதி புதன்கிழமை மீளவும் திறக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் யாவும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

முன்பள்ளி நிலையங்களுக்குச் சென்ற மாநகர சுகாதாரப் பிரிவினர் அவற்றின் சுகாதார நடைமுறைகளையும் பார்வையிட்டனர்.

முன்பள்ளி நிலையங்களில் கல்வி கற்கும் சிறுவர்கள் சமூக இடைவெளியைப் பேண வேண்டும், கைகளை அடிக்கடி சவர்க்காரமிட்டு கழுவவேண்டும், அத்துடன் வகுப்பறைகள் சுற்றுச்சூழல் யாவும் சுத்தமாக இருக்க வேண்டும் போன்ற சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு அறிவிக்கப்பட்டது.

முன்பள்ளிகளுக்கு வருகை தரும் சிறுவர்கள் வீட்டில் இருந்தே கொதித்தாறிய நீரை கொண்டு வரவேண்டும். அதனைவிட சத்துணவாக கடலை, பயறு, கௌப்பி போன்றவற்றை உணவுக்காக பயன்படுத்த வேண்டும்.

முன்பள்ளி நிலையங்களில் வைத்து எந்தவித உணவு வகைகளும் வழங்கக் கூடாது எனவும் சுகாதாரப் பிரிவினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஐ-17)

## மும்மொழி கற்கைநெறி ஆரம்பம்

கிளிநொச்சி, செப்.4

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் அரச அலுவலர்களுக்கான 3 மாத கால சிங்கள கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

விண்ணப்பதாரிகள் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் நிர்வாக அலுவலகருடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண மும்மொழிக் கற்கை நிலையபதில் பணிப்பாளர் பி.என். சுதர்ஷன் அறிவித்துள்ளார்.

(ஐ)

## வெவ்வேறு விபத்துக்களில் மாணவர்கள் உட்பட மூவர் காயம்

கிளிநொச்சி,செப்.4

கிளிநொச்சியில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் மூவர் காயமடைந்தனர்.

கிளிநொச்சி மருத்துவமனைக்கு முன்பாக ஏ9 முதன்மை வீதியில் லொறியும், சைக்கிளும் மோதியதில் ஒருவர் காயமடைந்தார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது. காயமடைந்த நபர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதேவேளை கிளிநொச்சி டிப்போ வீதியில் ரயில் நிலைய கடவைக்கு அருகில் ஓட்டோவும், மோட்டார் சைக்கிளும் மோதியதில் ஓட்டோ குடைசாய்ந்தது.

இதில் பாடசாலை மாணவர்கள் இருவர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர். இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றது.

(ஐ-214)



## கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,செப்.4

யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் 248 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குருநகர் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நபரே யாழ்ப்பாண மதுவரி திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

மதுவரி திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த ரகசிய தகவலை அடுத்து யாழ்ப்பாண நகரப் பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இந்நிலையில் சந்தேகநபர் விற்பனைக்கு தயாராக தனது மோட்டார் சைக்கிளில் கஞ்சாவை மறைத்து வைத்திருந்தவேளை கைதுசெய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண மதுவரி உதவி ஆணையாளர் பிரபாத் ஜெயவிக்கிரமவின் வழிநடத்தலின் கீழ் யாழ்ப்பாண மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ரகுநாதன் தலைமையிலான அணியினரால் இவர் கைது செய்யப்பட்டார்.

(ஐ-111)

## மஹரமக விபத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, செப்.4

மஹரமக, நாவின்ன பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காயமடைந்தார்.

இந்த விபத்து நேற்று அதிகாலை 1.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த கார் மரத்துடன் மோ... யில் இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்ட... காயமடைந்த நபர் சிகிச்சைக்காக களுபோவி... போதான மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளா... அதேநேரத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்க... பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனையில் வை... கப்பட்டுள்ளன.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-இ

## விளையாட்டில் மோதல்; இரு வீரர்கள் காயம்

வவுனியா, செப்.4
கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இருவர் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் வவுனியா செட்டிக்குளம் காந்திநகர் விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெற்றது.
இந்த மைதானத்தில் இரு கழகங்களுக்கிடையே மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி இடம்பெற்றது.
இதனிடையே இரு கழக அணியினருக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இந்த மோதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-18)

# காலநிலை மாற்றத்தால் மன்னாரில் 1,413 பேர் பாதிப்பு

மன்னார், செப்.4
**கடந்த இரு தினங்களாக மன்னார் மாவட்டத்தில் கடும் காற்றுடன் கூடிய மழை மற்றும் இடி மின்னல் தாக்கத்தால் 389 குடும்பங்களைச் சேர்ந்த 1,413 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.**

மன்னார் நகர் பிரதேச செயலாளர் பிரிவில் 99 குடும்பங்களைச்சேர்ந்த 398 பேரும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 154 பேரும், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 224 குடும்பங்களைச் சேர்ந்த 861 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
அத்தோடு மன்னார் நகரில் 3 வீடுகளும், நானாட்டானில் 46 வீடுகளும், முசலிப் பிரதேசத்தில், 219 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இவற்றுடன் முசலிப் பகுதியில் 05 வர்த்தக நிலையங்களும் பாதிப்படைந்துள்ளன.
மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் மழை வெள்ளத்தால் இடம்பெயர்ந்திருந்த 55 குடும்பங்களைச் சேர்ந்த 200பேர் தற்போது மழை குறைவடைந்துள்ள நிலையில், தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பியுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ-60)



முல்லைத்தீவு கரிப்பட்டமுறிப்பு அ.த.க.பாடசாலையில் மாணவர்களின் நலன் கருதி கைகழுவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சுவிஸ் நாட்டில் வசிக்கும் திருமதி.உதயசீலி சிவானந்தம் தனது பிறந்தநாளை முன்னிட்டு இந்த உதவியை அண்மையில் வழங்கியுள்ளார். (ஐ-222)





## முத்துமாரி அம்மன் ஆலய நுழைவாயில் திறப்பு

வவுனியா, செப்.4
வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகப்பிரிவின் துட்டுவாகை கிராமத்தில் அமைந்துள்ள முத்துமாரி அம்மன் கிராமத்துக்குமான நுழைவாயில் கோபுரம் நேற்று முன்தினம் புதன்கிழமை திறக்கப்பட்டது.
சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட இந்த நுழைவாயில் கோபுரத்தை இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த சிற்பக்கலைஞர்கள் வடிவமைத்திருந்தனர்.
ஆலய நிர்வாகசபை தலைவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மதகுருமார்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர், பிரதேச சபை தவிசாளர் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின், பிரதிநிதிகள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ-110,222)



கோழிக் குஞ்சு பொரிக்கும் நவீன இயந்திரத்தை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவனேசன் என்பவர் உருவாக்கியுள்ளார்.
இந்த இயந்திரத்தைத் தயாரித்து, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்காக இலவசமாக வழங்கி வருகிறார். அவருடைய இந்தச் செயற்பாட்டை பலரும் பாராட்டி வருகின்றனர். (ஐ-20)




தருமபுரம் நெத்தலியாற்று சித்திவிநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் தீர்த்தத் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ஐ-113)


## பயிலுநர்களின் ஆவணங்கள் பதிவு

சாவகச்சேரி, செப். 4
தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இணைந்து கொண்ட பட்டதாரி பயிலுநர்களின் ஆவணங்கள் பதிவு பிரதேச செயலகத்தில் நடைபெற்று வருகிறது.
புதிதாக இணைந்து கொண்ட பட்டதாரி பயிலுநர்களுக்கான கலந்துரையாடலில் பட்டதாரி என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது.
இதன்படி நேற்று ஆரம்பிக்கப்பட்ட பதிவுகள் இன்று வெள்ளிக்கிழமையும் நடைபெறும்

## கசிப்புடன் இருவர் கைது

தருமபுரம், செப்.4
கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 36 லீற்றர் கசிப்பு மற்றும் இரு மோட்டார் சைக்கிள்கள் என்பன கைப்பற்றப்பட்டன.
தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து மாயவனூர் பகுதியில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டனர். (ஐ-113)





முசலி பிரதேசச் செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 92 பட்டதாரி பயிலுநர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை பிரதேச செயலகத்தில் வைத்து பிரதேச செயலாளர் சி.ராஜீவால் வழங்கப்பட்டன. (ஐ-56)

## கலந்துரையாடல்

முல்லைத்தீவு, செப்.4
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்டு இயங்கிவரும் பொது அமைப்புகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளைக் கண்டறியும் சிறப்பு கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் முன்னாள் பிரதியமைச்சரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது. (ஐ-222)



**வீடு வாடகைக்குண்டு**

தெல்லிப்பளையில் வீடு வாடகைக்கு உண்டு. தனி அறைகளாகவும் தரப்படும்.

தொடர்புக்கு: 077 6287194

**உடனடி வேலைவாய்ப்பு**

**R.I.B Group (pvt) Ltd நிறுவனத்தில்**

பதவிகள் : -

- விற்பனைப் பிரதிநிதிகள் **(Sales Representative)** → **Salary Package 50000**
  வயது:- (25-45)
- வாகன சாரதிகள் **Drivers - Heavy vehicle)**
- களஞ்சிய உதவியாளர் **(Store Helper)**

● நேர்முகப் பரீட்சை :- 05.09.2020
● நேரம் :- காலை 10.30 - மதியம் 12.30 வரை (10.30 am-12.30 pm)
● இடம் :- இல.83, காதி அபுபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.

மேலதிக தகவல்களுக்கு:

077 388 3879, 076 138 9356

# வெளிநாடுகளில் உள்ளோரை மீள அழைப்பது தடைப்படாது

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 4

மத்திய கிழக்கு உள்ளிட்ட வெளிநாடுகளில் சிக்கியுள்ள அனைத்து இலங்கையர்களையும் எவ்வழியிலேனும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

இராஜகிரியவிலுள்ள கொவிட்19 ஒழிப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொவிட்19 சமூகத்தினுள் பரவாமல் கட்டுபடுத்தியுள்ள ஒரே நாடு இலங்கையாகும். மத்திய கிழக்கு உள்ளிட்ட உலகில் ஏனைய பல நாடுகளிலிருந்தும் பல இலங்கையர்கள் நாட்டுக்கு வர எதிர்பார்த்துள்ளனர். எனினும், எமது பிரதான பொறுப்பு நாட்டிலுள்ள மக்களை

கொரோனாவிலிருந்து பாதுகாப்பதாகும். அது அரசு என்ற அடிப்படையில் எமக்கு காணப்படும் பெரும் பொறுப்பாகும்.

நாட்டுக்கு வர எதிர்பார்த்துள்ள மத்திய கிழக்கு உள்ளிட்ட ஏனைய பல்வேறு நாடுகளிலிருந்து சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்களை கட்டம் கட்டமாக அழைத்துவர நடவடிக்கை

எடுத்துள்ளோம். இதன்போது எம்மால் முடிந்தளவுக்கே அவர்களை அழைத்துவர முடியும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் எமக்கு மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டிய தேவை உள்ளது.

காரணம் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் சிறு தவறு ஏற்பட்டாலும் மீண்டும் சமூகத்தினுள் வைரஸ் பரவல் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளது. உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளதைப் போன்று சுவாசம்

மூலமும் இந்த வைரஸ் பரவக்கூடும்.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை அரசாங்கம் என்ற ரீதியில் எவ்வாறேனும் நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உறுதியாகக் கூறுகின்றோம். எனினும், ஒரே தடவையில் அனைவரையும் அழைத்து வர முடியாது. இராணுவத்தினரால் நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் நிர்வகிக்க ப்பட்டு வருகின்றன. அந்த பலத்தின் அடிப்படையிலேயே வைரஸ் பரவலை கட்டுப்படுத்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. என்றார். (த)

**மரண அறிவித்தல்**



**சிவசம்பு துரைசிங்கம்**

சங்குவேலி தம்மளையை பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு துரைசிங்கம் நேற்று (03.09.2020) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு சிவக்கொழுந்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், இராசமணியின் அன்புக் கணவரும், குலசேகரம், இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயகிருஷ்ணன் (Telecom, Jaffna) ஜெயகௌரி (RDHS Office-Jaffna), சசிகரன் (France) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணதாஸ் (அருணோதயாக் கல்லூரி) வரதரூபி (மஹாஜனாக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அங்கவி, அனுவர்கன், பூர்வி, கேசவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2020) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் சோமராந்தோட்டம், உடுவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மருதனார்மடம், பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**

பிறப்பு 28 . 12 . 1954



இறப்பு 03 . 09 . 2020

**திருமதி பாலேந்திரன் யோகானந்தமலர்**

அராலியை பிறப்பிடமாகவும் இல 10, துரைராசா வீதி வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலேந்திரன் யோகானந்தமலர் நேற்று (03.09.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் இரத்தினபூபதி தம்பதியரின் அன்பு மருமகளும் பாலேந்திரனின் (முன்னாள் தர்மலிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், பண்டிக்கோட்டு பிள்ளையார் கோவிலடி ) அன்பு மனைவியும் நிரஞ்சனின் (கனடா) அன்புத் தாயாரும், சுகாஷினியின் (கனடா) அன்பு மாமியும், ஓவியா (கனடா), டியன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ராணி (லண்டன்), பேபி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாவதியின் (கனடா) மைத்துனியும், சுதாகர் (கனடா-கமலாவதியின் கணவர்) மற்றும் சிவாஜினி (கனடா), பிரதீபன் (கனடா), நிரோஜினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (04.09.2020) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.10, துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை.

தகவல்:
கணவர்-பாலேந்திரன்

T.P 077 603 8263

இரத்தினகுமார் சந்திராதேவியின் சம்பந்தி 021 222 0593
நிரஞ்சன் சுகாஷினி 0011 416 451 7178 (கனடா)

**கலைப்பீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

2018/19 கல்வியாண்டு கலைப்பீட புதிய மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வும் வழிகாட்டல் விரிவுரைகளும்

2018/19 கல்வியாண்டு புதிய மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வும் வழிகாட்டல் விரிவுரைகளும் 07.09.2020 தொடக்கம் 11.09.2020 வரை காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறும்.

முதலாவது தொகுதி மாணவர்களுக்கு 07.09.2020 அன்று வரவேற்பு நிகழ்வு காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி 10.30 மணிவரை நடைபெறும். வழிகாட்டல் விரிவுரைகள் 08.09.2020 தொடக்கம் 11.09.2020 வரை காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 1.00மணி வரை நடைபெறும்.

இரண்டாவது தொகுதி மாணவர்களுக்கு 07.09.2020 அன்று வரவேற்பு நிகழ்வு மாலை 1.30 மணிக்கு ஆரம்பமாகி 3.30 மணி வரை நடைபெறும். வழிகாட்டல் விரிவுரைகள் 08.09.2020 தொடக்கம் 11.09.2020 வரை மாலை 1.30 மணி தொடக்கம் பி.ப 5.30 மணிவரை நடைபெறும்.

07.09.2020 அன்று முதலாவது தொகுதி மாணவர்களுக்கு பி.ப. 1.30 மணிக்கும் இரண்டாவது தொகுதி மாணவர்களுக்கு காலை 9.00 மணிக்கும் மாணவர் பதிவுகள் நடைபெறும். மாணவர்களுக்கான அழைப்பிதழ் கடிதங்களும் மாணவர் பதிவு தொடர்பாக கொண்டுவரவேண்டிய ஆவணங்கள் தொடர்பான அறிவித்தல் கடிதங்களும் தபால் மூலம் அந்தந்த மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**மேலதிக விபரங்களை:**

**www.jfn.ac.lk, www.jfn.ac.lk.arts** எனும் இணையத்தளங்களில் பார்வையிடலாம்.

மாணவர்கள் கோவிட் 19 பாதுகாப்பு தொடர்பான நடைமுறைகளை பின்பற்றி முகக்கவசம் அணிந்து நிகழ்ச்சிகளில் பங்குபற்றுதல் வேண்டும்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

**6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 21 . 05 . 1950

மறைவு 10 . 09 . 2014

அமரர்
**குலசிங்கம் வசந்தாதேவி**

தரணியில் நாமும் தவிக்கின்றோம் தாயே
நின் பிரிவால்
ஆதரவின்றி அவனியில்
நாமும் ஏங்குகிறோம் தினமும்

சீமாவளவு அளவெட்டி மத்தி,

நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.

## மாவை கொல்லங்கலட்டி கேணிக்கரை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் புனருத்தாரணசபைப் பொதுக்கூட்டம்


மேற்படி பொதுக்கூட்டம் **2020.03.29** திகதியன்று நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்து. **"கொரோனா"** தொற்று காரணமாக இரத்து செய்யப்பட்டிருந்த நிலையில் மீண்டும் கூட்டுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

- **காலம் : 20.09.2020 ஞாயிற்றுக்கிழமை**
- **நேரம் : பி.ப. 3 மணி**
- **இடம் : ஸ்ரீ வீரகத்தி விநாயகர் மணி மண்டபம்**
- **தலைவர் : க. துரைசிங்கம் (திருப்பணிச்சபை)**

இந் நிகழ்வில் உபயகாரர்கள் மற்றும் அடியவர்களது ஆலோசனைகளும் புதியசபை அங்கத்தவர் தெரிவும் இடம்பெற உள்ளதால் அடியார்கள் அனைவரும் வருகை தந்து கருத்துக்கள், ஆலோசனைகள் வழங்கவேண்டும் என அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
திருமதி ஞா.அன்னபரிபூரணம்
(புனருத்தாரணசபை)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



### திரு. கந்தையா ஜெயானந்தன்

(நிர்வாக உத்தியோகத்தர், யாழ் மாநகரசபை)

Best Wishes

கடந்த 37 வருடங்களாக உள்ளூராட்சி சபைகளில் பல பதவிகளை வகித்து தற்போது **யாழ் மாநகர சபையில் நிர்வாக உத்தியோகத்தராக (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்-அதிசிறப்பு)** கடமைபுரிந்து இன்று (04.09.2020) அகவை 60 பூர்த்தி செய்யும் திரு.கந்தையா ஜெயானந்தன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல சமூக சேவைகளை செய்ய கர்ணந் தோட்ட கந்தனை பிரார்த்திக்கிறோம்.

நாரந்தனை கிழக்கு,
ஊர்காவற்றுறை.

வாழ்த்துவோர்:
சகோதரர்கள், உறவினர்கள்.

## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)
## சபை நிதி 2020

01. வலிகாமம் வடக்கு பிரதேச சபை,சபை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. தலைவர்.பெறுகைக்குழு. வலிகாமம் வடக்கு பிரதேச சபை. காங்கேசன்துறை(கொல்லங்கலட்டி) வடமாகாணம். தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி புனரமைப்பு. வேலைகளுக்கு கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.ஆயினும் 08.05.2019ஆம் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் படி வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்வி கருத்தில் கொள்ளப்படலாம்.

04. கேள்விதாரர்கள் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன். வீதி புனரமைப்பு. கட்டட அமைப்பிற்கு பொருத்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினைப் பதிவு செய்தவராகவும் கறுப்புப்பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயும் இருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர். பெறுகைக்குழு.வலிகாமம் வடக்கு பிரதேச சபை. காங்கேசன்துறை(கொல்லங்கலட்டி)தொலைபேசி:- 0212241130, தொலைநகல்:- 0212243688இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 04.09.2020 ஆம் திகதியிலிருந்து 18.09.2020 வரை காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர்.பெறுகைக்குழு. வலிகாமம் வடக்கு பிரதேச சபை. காங்கேசன்துறை எனும் இடத்திலிருந்து 04.09.2020ஆம் திகதியிலிருந்து 18.09.2020 வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர். பெறுகைக்குழு .வலிகாமம் வடக்கு பிரதேச சபை. காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 18.09.2020ஆம் திகதி 14.30மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் / பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | | கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி கேள்வி செல்லுடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | வேண்டப் படும் தரம் | செல்லுடி யாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 1 | NP/14/41(14)/05/02/70 CF -01/2020 | 8ம் கட்டை 4வது இடது பக்க வீதி,2 வது ,3 வது ,4வது வலது பக்க வீதி புனரமைப்பு-மல்லாகம் | 1.229 | 90 நாட்கள் | C9/C8 வீதிப்புனரமைப்பு | 63 நாட்கள் | 20.11.2020 | 13,000.00 | 18.12.2020 |
| 2 | NP/14/41(14)/05/02/71 CF -02/2020 | மகாத்மா வீதியின் 5வது வலதுபக்க வீதி புனரமைப்பு-அளவெட்டி | 0.795 | 90 நாட்கள் | C9/C8 வீதிப்புனரமைப்பு | 63 நாட்கள் | 20.11.2020 | 8,000.00 | 18.12.2020 |
| 3 | NP/14/41(14)/05/02/72 CF -03/2020 | கும்பலை 2வது இடதுபக்க வீதி புனரமைப்பு-அளவெட்டி | 0.493 | 90 நாட்கள் | C9/C8 வீதிப்புனரமைப்பு | 63 நாட்கள் | 20.11.2020 | 5,000.00 | 18.12.2020 |
| 4 | NP/14/41(14)/05/02/73 CF -04/2020 | நாகேஸ்வரம் வீதி புனரமைப்பு- அளவெட்டி மேற்கு | 2.292 | 90 நாட்கள் | C8/C7 வீதிப்புனரமைப்பு | 63 நாட்கள் | 20.11.2020 | 23,000.00 | 18.12.2020 |
| 5 | NP/14/41(14)/05/02/74 CF -05/2020 | நெசவுசாலையிலிருந்து மயானம் செல்லும் வீதி புனரமைப்பு – கொல்லங்கலட்டி | 1.960 | 90 நாட்கள் | C9/C8 வீதிப்புனரமைப்பு | 63 நாட்கள் | 20.11.2020 | 20,000.00 | 18.12.2020 |
| 6 | NP/14/41(14)/05/02/75 CF -06/2020 | காட்டடைப்பு வீதி புனரமைப்பு-காங்கேசன்துறை | 0.623 | 90 நாட்கள் | C9/C8 வீதிப்புனரமைப்பு கொங்கிறீட் | 63 நாட்கள் | 20.11.2020 | 6,500.00 | 18.12.2020 |
| 7 | NP/14/41(14)/05/02/76 CF -07/2020 | மாவடி வைரவர் வீதி புனரமைப்பு-குரும்பசிட்டி | 1.427 | 90 நாட்கள் | C9/C8 வீதிப்புனரமைப்பு | 63 நாட்கள் | 20.11.2020 | 15,000.00 | 18.12.2020 |

10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 11.09.2020 ஆம் திகதி பி.ப.14.30 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேசசபை. காங்கேசன்துறை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**சோ.சுகிர்தன்**
**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.**
**04.09.2020**

## ஓரணியில்...

நல்லாட்சிக்கு வழிவகுத்த 19ஆவது திருத்தச் சட்டத்தின் பெரும்பாலான உள்ளடக்கங்களுக்கு முடிவு கட்டும் வகையிலுமே 20ஆவது திருத்தச் சட்டமூலம் தயாரிக்கப் பட்டுள்ளது. எனவே, நாடாளுமன்றத்தில் இந்தத் திருத்தச் சட்டமூலத்தை நாம் ஓரணியில் நின்று எதிர்ப்போம். நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் மக்களை அணிதிரட்டி இதற்கு எதிராகப் போராடுவோம்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகிய எதிர்க்கட்சிகள் கூட்டாகத் தெரிவித்தன.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு அமைச்சரவை நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியிருந்தது. இதையடுத்து இந்தத் திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் நேற்றிரவு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டும் வகையிலேயே அரசமைப்பின் கடந்த நல்லாட்சியில்18ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தினோம். அதன்பிரகாரம் 19ஆவது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருந்தோம். இதற்கு ராஜபக்ச அணியினரும்கூட சபையில் அன்று ஆதரவைத் தந்திருந்தார்கள்.

19ஆவது திருத்தச் சட்டத்துக்கமைய நாடாளுமன்றத்துக்கு அதியுச்ச அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அரசமைப்பு பேரவையும் உருவாக்கப்பட்டது. சுயாதீனக்குழுக்களும் நியமிக்கப்பட்டன. நாடாளுமன்றமும் நீதித்துறையும் தேர்தல்கள் ஆணைக்குழுவும் சுதந்திரமாக இயங்க அனுமதி கிடைத்தது. ஆனால், 20ஆவது திருத்தச் சட்டமூலத்தின் பிரகாரம் இந்த மூன்றிலும் பழையபடி ஜனாதிபதியின் தலையீடுகள் வந்துள்ளன. பிரதமரை நியமிக்கும் அதிகாரமும், பிரதம நீதியரசரை நியமிக்கும் அதிகாரமும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரமும் மீண்டும் ஜனாதிபதி வசம் சென்றுள்ளன.

இரட்டைக் குடியுரிமை கொண்டவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவியேற்க 20ஆவது திருத்தச் சட்டமூலத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் சகோதரரான பஸில் ராஜபக்சவை நாடாளுமன்றத்துக்கு வரவழைத்து அவருக்கு பொறுப்பு வாய்ந்த அமைச்சுப் பதவியை வழங்கி கோட்டாபய மஹிந்த பஸில் தலைமையிலான குடும்ப ஆட்சியையும், அதியுச்ச சர்வாதிகார ஆட்சியையும் நிலைநிறுத்தவே இந்த நடைமுறை வந்துள்ளது. இது எந்தவகையில் நியாயமானது?

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்ட நிறைவேற்றம் நாட்டின் ஜனநாயகத்துக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாக இருந்தது. ஆனால், தற்போது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள 20ஆவது திருத்தச் சட்டமூலம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறினால் அது இந்த நாட்டின் சாபக்கேடாக அமையும். எனவே, 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற இடமளியோம். அதை எதிர்க்கட்சிகள் ஓரணியில் நின்று எதிர்க்கும். நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் மக்களை அணிதிரட்டி இந்தத் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராகப் போராடுவோம்" என்றனர். (22)

## வீடு வாடகைக்குண்டு

பிறவுண்வீதி, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடனும் கூடிய ஐந்து அறைகளைக் கொண்ட வாகனத்தரிப் பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

077 654 4574

## தேவை

வேலையாள்கள் மற்றும் சாரதிகள் தேவை.

தொடர்புக்கு: இல.104, மாப்பியன் மில் வீதி, சுதுமலை, மானிப்பாய்.

0777 7 222 15


## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது) கிளைகளுக்கான கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத்தெரிவிற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் 2020.09.05 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பின்வரும் இடங்களில் நடைபெறும்.

சகல கிளைப் பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் கூட்ட அழைப்பிதழ்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்க தகைமையுடைய அழைப்பிதழ்கள் கிடைக்கப் பெறாதவர்கள் இவ் அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்று கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| தொ.இல. | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர் பெயர்கள் |
|---|---|---|---|
| 01 | நல்லூர் | யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் | கந்தசாமி சசிகரன் |
| 02 | கோப்பாய் | கந்தசாமி கோவிலடி சனசமூக நிலையம் மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய் | இராசையா உதயகுமார் |
| 03 | உடுவில் | யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம் மானிப்பாய் வீதி, மருதனார்மடம். | வல்லிபுரம் நிதர்சன் |
| 04 | சங்கானை | சித்தங்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகம், சித்தங்கேணி | பரமசிவம் தவப்பிரியன் |
| 05 | சண்டிலிப்பாய் | மானிப்பாய் பரிஸ் ப.நோ.கூ.சங்க தலைமை அலுவலகம், பொன்னாலை வீதி, மானிப்பாய் | பாலசுப்பிரமணியம் பாலவரதன் |
| 06 | சாவகச்சேரி | சாவகச்சேரி ப.நோ.கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம், கண்டி வீதி, சாவகச்சேரி | நாகலிங்கம் குமணதாசன் |
| 07 | யாழ்ப்பாணம் | கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் | மயில்வாகனம் கபிலன் |
| 08 | தெல்லிப்பழை | யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அளவெட்டிக் கிளைநிலையம், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி | பாக்கியராஜ் குருபரன் |
| 09 | காரைநகர் | காரைநகர் ப.நோ.கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம், சுற்று வீதி, காரைநகர் | தாமோதரம்பிள்ளை தவமன்னன் |

திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.
04.09.2020

செயலாளர்
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## வலிகிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி
## பதவி வெற்றிடம்

கீழ்க்காண் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் சங்கத்தினால் வெளிவாரியாக கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை ரூபா.10/- செலுத்தி தலைமைக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் **"பொது முகாமையாளர், வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி"** என்ற முகவரிக்கு நேரடியாகவோ அன்றேல் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் விண்ணப்பத்துடன் தகைமைச் சான்றிழ்களின் நிழல்பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக் கப்படும். (மேலதிக விபரம் தேவைப்படின் தலைமைக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்)

வயதெல்லை 18 - 45

**விண்ணப்ப முடிவுத்திகதி :21.09.2020 (நண்பகல் 12.00மணி)**

**01. பதவி: விற்பனையாளர்**

**சம்பள குறியீட்டு இல:** 308/17

சம்பள அளவுத்திட்டம்: 14725-17175
115x10-130x10 (04/2018இன்படி)

**வயதெல்லை** 18-45 (கூட்டுறவுப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.)

**தகைமைகள்** (அ) கூட்டுறவு பணியாளர் கனிஷ்டதரச்சான்றிதழ்

**அல்லது**

(ஆ) 8ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03)வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**02. பதவி: தொழிலாளி**

**சம்பள குறியீட்டு இல:** 318/17

சம்பள அளவுத்திட்டம் : 14725-17175
115x10-130x10 (04/2018இன்படி)

**வயதெல்லை** 18-45 (கூட்டுறவுப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.)

**தகைமைகள்** (அ) 5 ஆம் வகுப்பு கல்விச்சான்றிதழும் நல்ல தேக ஆரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

**பொது முகாமையாளர்,**
**வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ சங்கம்**
**நீர்வேலி,**

27.08.2020 ஆம் திகதிய இயக்குநர் சபைக்கட்டளைப்படி


உ
சிவமயம்

# அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பு

கடந்த 06.08.2020 வியாழக்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்பவிளக்கு

**அமரர் திருமதி**

## பரமேஸ்வரி யோகலிங்கம்



*ஜனனம்* 19.04.1954   *அஸ்தமனம்* 06.08.2020

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.09.2020) வெள்ளிக்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் பின் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் இடம் பெற்று, வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (05.09.2020) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**குடும்பத்தினர்**

**காளி கோயில் வீதி,**
**கொடிகாமம்.**

**077 087 5482, 077 725 2094**

## நிபுணர்....

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கில் இருந்த பிரச்சினைகளுக்குத் தீர்வாகவே மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. கடந்த 2 வருடங்களுக்கு மேலாக மாகாணசபைகள் இயங்கவில்லை. ஆனாலும் அவற்றுக்கு தேர்தலை நடத்துமாறு வடக்கு, கிழக்கில் இருந்து எவரும் குரல் எழுப்பவில்லை.

மாகாணசபை முறை நீக்கப்படுமா, இல்லையா என்பது தொடர்பில் என்னால் கூறமுடியாது. அது தொடர்பான பரிந்துரையை நிபுணர்குழுவே முன்வைக்கும். அதன்பின்னரே அமைச்சரவையில் ஆராயப்பட்டுதீர்மானங்கள் எடுக்கப்படும். 13 ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவதா, இல்லையா என்பது தொடர்பில் அமைச்சரவையில் எந்தவொரு கலந்துரையாடலும் இடம்பெறவில்லை. புதிய அரசமைப்பு இன்னமும் உருவாக்கப்படவும் இல்லை.

அவ்வாறு இயற்றப்பட்ட பின்னரே சட்டரீதியாக, இராஜதந்திர ரீதியாக எழும் சிக்கல்கள் பற்றி அறியக்கூடியதாக இருக்கும். நாட்டிலுள்ள முதன்மையான நிபுணர்கள்தான் அரசமைப்பை இயற்றும் குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, 13 தொடர்பிலும் விரிவாக ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைக்கப்பார்கள். அதன்படி அரசியல் தீர்மானம் எடுக்கப்படும், என்றார். (ஒ.5,44)

## வடக்கில்...

ஆளுநரின் செயலராகவும், மகளிர் விவகார அமைச்சின் செயலராகவும் கடமையாற்றிய ஆர்.வரதீஸ்வரன், உள்ளூராட்சி அமைச்சின் செயலராகவும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

பேரவைச் செயலராக கடமையாற்றிய திருமதி ரூபினி வரதலிங்கம். மகளிர் விவகார அமைச்சின் செயலராக இடமாற்றப்பட்டுள்ளதுடன், பேரவைச் செயலராக பதில் கடமையும் புரிவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலராகக் கடமையாற்றிய எஸ்.சத்தியசீலனுக்கு புதிய நிலையம் எதுவும் வழங்கப்படவில்லை. (ஒ.5)

## 20...

நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நடைபெற்று ஓராண்டு முடிவடைந்த பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் நான்கரை வருடங்கள் முடிவடைந்த பின்னரே ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்கமுடியும் என்ற நிலை காணப்பட்டது. 19 வருவதற்கு முன்னர் ஒன்றரை வருடங்களுக்கு பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தது. தற்போது அது ஓராண்டாக குறைக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆகவும் இராஜாங்க மற்றும் பிரதியமைச்சர்களின் எண்ணிக்கை 40 ஆகவும் இருக்கவேண்டும் என்ற வரையறை நீக்கப்பட்டு ள்ளது.

இதன்படி தமக்கு தேவையான விதத்தில் அமைச்சர்களை நியமிப்பதற்கான வாய்ப்பு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு கிட்டும்.

அதுமட்டுமல்ல பிரதமர் மற்றும் அமைச்சர்கள் பதவி நீக்குவதற்கும், எந்தவொரு அமைச்சையும் தனக்குகீழ் கொண்டுவருவதற்கான அதிகாரமும் ஜனாதிபதியின் கைகளுக்குள் சென்றடையும். 19 ஆவது திருத்தம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரும் இதே நிலைமை காணப்பட்டது.

இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடமுடியாது, நாடாளுமன்றம் வரவும் முடியாது என்ற நடைமுறையும் 20 ஊடாக நீக்கப்படவுள்ளது.

உயர் பதவிகளுக்கான நியமனங்களை வழங்கும் அரசியலமைப்பு பேரவை நீக்கப்பட்டு, நாடாளுமன்ற பேரவை என்ற விடயம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பு பேரவையில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும், மூன்று சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. எனினும், நாடாளுமன்ற பேரவையில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு கதவடைப்பு செய்யப்பட்டுள்ளது. உயர்நியமனங்களை வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடைத்துள்ளது.

நாடாளுமன்ற பேரவையில் 5 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கலாம்.

பிரதம அமைச்சர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமரின் பிரதிநிதி, எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதி

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான வயதெல்லை 35 இலிருந்து 30 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிகாலம் 5 ஆண்டு, இரண்டு தடவைகள் மாத்திரமே அந்த பதவியை வகிக்கலாம் என்ற 19 இன் ஏற்பாடு 20ஆவது திருத்தச்சட்டமூலத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இரண்டு சுயாதீன ஆணைக்குழுக்கள் நீக்கப்பட்டுள்ளன. (கணக்காய்வு சேவை ஆணைக்குழு, தேசிய பெறுமை ஆணைக்குழு)

தேர்தல் ஆணைக்குழு உட்பட 19 இன் பிரகாரம் உருவாக்கப்பட்ட ஏனையவை அதேபோன்று தொடரும். தேர்தல் ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. தலைவரையும் அவரே நியமிக்கலாம்.

முப்படை தளபதிகள், சட்டமா அதிபர், கணக்காய்வாளர் நாயகம், பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரை ஜனாதிபதியே நியமிப்பார்.

20 ஆவது திருத்தச் சட்ட மூலத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள நிலையில், வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டுள்ளது. சமூககருத்தாடலுக்கான இரு வாரங்கள் அவகாசம் வழங்கப்படும். ஏதேனும் சர்ச்சைகள் இருப்பின் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கலாம். அதன்பின்னரே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

தேசிய கீதம், தேசியக்கொடி, ஒற்றையாட்சி, பௌத்த மதத்துக்கான முன்னுரிமை உட்பட அரசியலமைப்பிலுள்ள 12 விடயங்கள் சார்ந்தவற்றுடன் தொடர்புடையவற்றை மாற்றுவதாக இருந்தாலே சர்வஜன வாக்கெடுப்பு தேவைப்படும்.

எனவே, நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் 20ஐ நிறைவேற்றலாம். சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டிய தேவை எழவில்லை என சட்டமா அதிபரும் குறிப்பிட்டுள்ளார்.

20 ஆவது திருத்தச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறிய பின்னர் அதில் சபாநாயகர் கையொப்பம் இடும் தினத்தில் இருந்து சட்டம் நடைமுறைக்கு வரும். (எ-44)

## திருத்த...

உயிரிந்துள்ளார்.

காலி, மீகொடவத்தையைச் சேர்ந்த எம்.எம்.ஆர்.இந்துனில (வயது38) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நல்லூர், குறுக்கு வீதியில் உள்ள வீடொன்றுக்கு வீட்டுக் கூரைத் திருத்த வேலைக்கு இவரது குழுவினர் வந்திருந்தனர். நேற்றுமுன்தினம் இரவு உறங்கச் சென்றவர் இரவு 11 மணியளவில் இயற்கைக் கடன் கழிக்கச் சென்றுள்ளார். அப்போது மாடியில் இருந்து தவறி வீழ்ந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர் மயக்கமடைந்ததை அடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் ஏற்கனவே இறந்து விட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

## இளைஞர்...

அரியாலைப் பகுதியில் மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தை பொலிஸார் மறித்துள்ளனர். உழவு இயந்திரத்தை நிறுத்தாமல் சாரதி சென்றுள்ளார். கலைத்துப்பிடித்த பொலிஸார் உழவு இயந்திர சாரதி உள்ளிட்ட மூவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இந்தச் சம்பவத்தை 'வீடியோ' எடுத்த இளைஞனையும் பொலிஸார் தாக்கியுள்ளனர்.

இது தொடர்பில் இளைஞர்களின் உறவினர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்தியக் கிளையில் முறைப்பாடு செய்தனர். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் துரித நடவடிக்கை எடுத்து, கைது செய்யப்பட்ட இளைஞர்களை உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்டமருத்துவ அதிகாரியிடம் முற்படுத்துமாறு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும், எஸ்.எஸ்.பிக்கும் கடிதம் அனுப்பினார்.

இதனையடுத்து 'வீடியோ' எடுத்த இளைஞனை விடுவித்த பொலிஸார், ஏனைய மூவரையும் சட்டமருத்துவ அதிகாரி முன்னிலையில் முற்படுத்தினர்.

மனித உரிமைகள் ஆணைக்குழு இன்று தனது விசாரணைகளை ஆரம்பிக்கும் என்று தெரியவருகின்றது. (ஒ.5)

## வேறு...

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாம் ஆதரிக்கத் தீர்மானித்துள்ளமைக்குப் பிரதான காரணம் கடந்த நல்லாட்சியில் முன்னாள் பிரதமர் ரணில் தலைமையிலான குழுவினரின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளே ஆகும்.

பல அர்ப்பணிப்புகளுக்கு மத்தியில் அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் எனது ஆட்சியில் நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்தச் சட்டத்தின் ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில் இருந்த எனக்கான அதிகாரங்களைக் குறைத்தேன். நாடாளுமன்றத்துக்கு அதிக அதிகாரங்களை வழங்கியிருந்தேன். ஆனால், அதை ரணில் குழுவினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி நாட்டின் அரசியலை நடுத்தெருவுக்குக் கொண்டு வந்தனர். நாடாளுமன்றத்துக்கான அதிகாரங்களை அவர்கள் துஷ்பிரயோகப்படுத்தினர். நல்லாட்சியை நல்வழிப் பாதையில் கொண்டுசெல்ல அவர்கள் இடமளிக்கவில்லை.

இந்தநிலையில், 19ஆவது திருத்தச் சட்டத்தில் சில மாற்றங்கள் ஏற்படுத்தி 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசு நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளது.

நல்லாட்சியில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களால் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்தில் நாங்கள் இருக்கின்றோம்-என்றார். (எ-22)

## 13ஐ...

ஒன்றியம்' வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஒன்றியத்தின் இணைப்பாளரான கலாநிதி குணதாச அமரசேகர, மேலும் கூறியவை வருமாறு,

புதியதொரு அரசியலமைப்பை உருவாக்குவதற்கே நாட்டு மக்கள் அரசாங்கத்துக்கு ஆணை வழங்கினர். எனவே, கூடியவிரைவில் அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். புதிய அரசியலமைப்பு எப்போது அமுலுக்கு வரும் என்பது தொடர்பில் பலகோணங்களில் கருத்துகள் வெளியிடப்பட்டுவருகின்றன. இதனை ஏற்கமுடியாது. இதற்கான கால எல்லையை அரசாங்கம் மக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்.

அதேபோல் புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்படும் விடயங்கள் பற்றியும் தெளிவுபடுத்தவேண்டும். குறிப்பாக இலங்கைக்கு பலவந்தமாக திணிக்கப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்படவேண்டும். இது தொடர்பான தனது நிலைப்பாட்டை அரசாங்கம் அறிவிக்கவேண்டும். புதிய அரசியலமைப்பு இயற்றப்படும்வரை நாட்டில் எந்தவொரு தேர்தலும் நடத்தப்படக்கூடாது. 13 நீக்கப்படும் என்ற உறுதிமொழியையும் அரசாங்கம் வழங்கவேண்டும்.-என்றார். (எ-44)

## 'தமிழ்...

தமிழீழ விடுதலைப் புலிகளைப் புகழ்ந்து அவர்களின் கொடிய பயங்கரவாதப் போராட்டத்தை நியாயப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் ஆகிய மூவரையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து சிறையில் அடைப்பதுதான் ஒரே வழி' என்று அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாகத் தெரிவித்திருந்தனர். இந்தச் செய்தி நேற்றுமுன்தினம் புதன்கிழமை 'உதயன்' பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

இந்தச் செய்தியைப் பார்வையிட்ட மஹிந்த ராஜபக்ச, இது தொடர்பில் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் அவர்கள் (தமிழ்த் தலைவர்கள்) தம் நிலைப்பாட்டைக் வெளிப்படுத்துவதற்கான உரிமை உண்டு. அதற்கான சுதந்திரமும் உண்டு. அந்தச் சுதந்திரத்தை நாம் பறிக்கமாட்டோம். ஆனாலும் அவர்கள் வீண் சர்ச்சையை ஏற்படுத்தும் விதத்தில் பேச்சுக்களைப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். அவர்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து நாடாளுமன்ற உரைகளை ஆற்றவேண்;டும், என்றார். (ஒ.5)

## டயலொக் கரப்பந்தாட்டத்துக்கான விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், செப்.4

2020 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி தங்கக்கோப்பை டயலக் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் போட்டி ஆண், பெண் இரு பாலருக்குமான திறந்த போட்டியாக நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை வடக்கு மாகாண இணைப்பாளர் கி.மனோகரனிடம் அல்லது யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்ட செயலாளர் வாகீசனிடம் பெற்று, இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் 186/26 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள வடக்கு மாகாண இணைப்பாளரிடம் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-422)

## சம்பியனானது சீமா கழகம்

கொடிகாமம், செப்.4

தென்மராட்சியில் இளைஞர் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் மீசாலை சீமா இளைஞர் கழகம் சம்பியனானது. இந்தப் போட்டி சீமா கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன் இறுதியாட்டத்தில் கைதடி மின்னொளி இளைஞர் கழகமும், மீசாலை சீமா இளைஞர் கழகமும் மோதிக் கொண்டன. இதில் மீசாலை சீமா இளைஞர் கழகம் வெற்றியைத் தனதாக்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மீசாலை இளைஞர் கழகம் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மின்னொளி இளைஞர் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப்பரிமாற்றங்களில் 63 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மீசாலை சீமா இளைஞர் கழகம் 63 ஓட்டங்களைப்பெற்றுக் கொள்ள போட்டி சமனிலையானது. இதனால் போட்டி சுப்பர் ஓவர் முறைக்கு தள்ளப்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய மீசாலை சீமா இளைஞர் கழகம் 12 ஓட்டங்களைப்பெற்றுக் கொள்ள பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கைதடி மின்னொளி இளைஞர் கழகம் 6 ஓட்டங்களை பெற்றது. (ந-159)



## செஸ் ஒலிம்பியாட்டில் இந்திய -ரஷ்யா இணைச் சம்பியன்

புதுடில்லி, செப்.4

செஸ் ஒலிம்பியாட் தொடரில் முதன் முறையாக இந்திய அணி சம்பியன் பட்டம் வென்றது. இந்தத் தொடரின் 44 ஆவது பருவகாலப் போட்டிகள் இணையம் ஊடாக நடைபெற்றது.

163 அணிகள் பங்கேற்ற இந்தப் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்திய அணி ரஷ்யாவை எதிர்கொண்டது. இணையத்தளத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இரண்டு நாடுகளும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இந்திய அணிக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளனர். திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெற்ற இந்திய செஸ் அணியை எண்ணி நாட்டு மக்கள் மிகவும் பெருமைப்படுகின்றனர் என குடியரசுத் தலைவர் தமது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற ரஷ்ய செஸ் அணிக்கும் குடியரசுத் தலைவர் பாராட்டு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

## மலிங்கவுக்கு பதிலாக ஜேம்ஸ் பட்டின்ஸன்

புதுடில்லி, செப்.4

2020 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியில் லசித் மலிங்க விளையாடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலிங்கவுக்கு பதிலான மாற்று வீரராக ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பட்டின்ஸன் உள்வாங்கப்பட்டுள்ளார் என்று மும்பை இந்தியன்ஸ் அணியின் நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ந)



## ரேஞ்சர்ஸ் அணி வெற்றி

கரணவாய், செப்.4

வலிகாமம் கால்பந்தாட்டச் சங்கம் நடத்திய "மறைந்த நடுவர்கள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரின்" ஆட்டம் ஒன்றில் கொற றாவத்தை ரேஞ்சர்ஸ் அணி வெற்றி பெற்றது.

அணிக்கு 7 பேர் கொண்ட இந்தத் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து ஏழாலை பைவ்ஸ்ரார் அணி மோதியது. ஆட்ட நேரமுடிவில் 7:2 என்ற கோல் கணக்கில் கொற றாவத்தை ரேஞ்சர் அணி வெற்றி பெற்றது. ரேஞ்சர்ஸ் அணி சார்பாக ஆர்த்திகன் 4 கோல்களையும், சிவதாரன் இரு கோல்களை யும், சுஜாஸ் ஒரு கோலை யும் பெற்றுக்கொடுத்தனர். (எ-108)





கண்டாவளைப் பிரதேசத்துக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் இளந்தளிர் கழகத்தினால் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நடத்தப்பட்டது. இந்தச் சுற்றுப்போட்டி அமரர் சுதர்சனின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை யொட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது. சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் புதிய சூரியன் கழகமும், ஸ்டார் கழகமும் போட்டியிட்டு ஸ்டார் கழகம் வெற்றிக்கிண்ணத்தைத் தட்டிச்செல்ல புதிய சூரியன் கழகம் இரண்டாம் இடத்தைப் பிடித்துக் கொண்டது. (ந-21)

## 30 ஆண்டுகளில் ஆஸியில் முதல் பொருளாதார வீழ்ச்சி

கொரோனாத் தாக்கம் காரணமாக 30 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆஸ்திரேலியாவின் பொருளாதார வளர்ச்சி வீதம் மிக மோசமாக வீழ்ச்சி கண்டுள்ளது.

ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலாண்டின் அந்நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி முன்னைய காலாண்டுடன் ஒப்பிடுகையில் 7 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையிலான காலப்பகுதியில் ஆஸ்திரேலியாவின் பொருளாதார வளர்ச்சி வீதம் 0.3 வீதமாக வீழ்ச்சி கண்டுள்ளது. (வஇ)

## சவப்பெட்டி விழிப்புணர்வு

ஜகார்த்தா, செப்.4

இந்தோனேசியாவில் கொரோனா வைரஸ் பாதிப்புத் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சவப்பெட்டி ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பு உடை அணிந்தவர்களும் பேய்களைப் போல வேடமிட்டவர்களும் இந்தோனேசியத் தெருக்களில் காலியான சவப்பெட்டிகளுடன் ஊர்வலமாகச் சென்றனர். இந்தோனேசியாவில் சுகாதாரப் பாதுகாப்பு ஆலோசனைகளை மீறுவதால் கொரோனாப் பரவல் அதிகரித்து வருகிறது. ஆலோசனைகளை மீறுவதால் ஏற்படும் விளைவுகளை உணர்த்த ஊர்வலம் உதவும் என்று அதிகாரிகள் நம்புகின்றனர். இந்தோனேசியாவில் சுமார் 100 முன்னிலை மருத்துவர்கள் வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

உலகின் நான்காவது பெரிய மக்கள் தொகையைக் கொண்ட இந்தோனேசியாவில் 177,000க்கும் அதிகமானோர் நோய்ப்பரவலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

7,500க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். பொருளாதாரச் சீர்குலைவைத் தடுக்க ஜூலை மாதத்தில் இந்தோனேசிய அரசாங்கம் அங்கு முடக்கநிலையைத் தளர்த்தியமை குறிப்பிடத்தக்கது. (வ)



## சமையல் ஆள் தேவை

தனிநபர் ஒருவருக்கு தினமும் 3 வேளை வந்து சமைத்து கொடுக்கக் கூடிய சமையல் ஆள் தேவை.

தொடர்பு:
077 9592 628

## 2021 A/L வெப்பவியல்

Mr.M. கருணாநிதி B.Sc(Hons)

ஆரம்பம்
05.09.2020
சனி

Eng.Medium: 5.30 AM
தமிழ் மூலம் : 9.30 AM

077 618 3064
பெருமாள் கோவில் ஒழுங்கை

# நவால்னி உடலில் கொடிய விஷம்

## - ஜேர்மன் அரசு தகவல்

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி உடலில் கொடிய விஷம் கலந்துள்ளது என ஜேர்மன் அரசு தெரிவித்துள்ளது. ரஷ்ய ஜனாதிபதி புடினைக் கடுமையாக விமர்சித்து வந்த நவால்னி, அண்மையில் விமான பயணத்தின் போது திடீரென சுயநினைவு இழந்து கோமா நிலைக்கு சென்றார். இதையடுத்து தேநீரில் விஷம் கலந்து நவால்னியை கொல்ல ரஷ்ய அதிகாரிகளால் சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது எனப் பரவலாக குற்றம்சாட்டப்பட்டது. இந்த விவகாரத்தில் ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மெர்கல் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெர்கல் ஆகியோரின் தலையீட்டால் பெர்லின் மருத்துவமனையில் தற்போது அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஜேர்மனிய அரசு தரப்பில், ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நாவல்னி தொடர்ந்து ஆபத்தான நிலையில் உள்ளார். நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் கொடிய விஷம் அவருக்கு தரப்பட்டுள்ளது. அந்த விஷம் ரஷ்யாவிலிருந்தே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அலெக்ஸி நாவல்னி மீதான இந்தத் தாக்குதலை ஜேர்மனி கடுமையாகக்கண்டிக்கிறது, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 25 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்
26 • 10 • 1942

விண்ணில்
11 • 09 • 1995

### அமரர் முருகேசு கனகசபை
(ஆசிரியர்)

திதி: ஆவணி மாத அபரபக்க துதியை

கால்நூற்றாண்டு இன்று கடுகதியாய்
பறந்ததுவே
ஊர் போற்ற எம்மை உலகினிலே உயர்த்தி
வைத்தீர்
இன்று நீங்கள் இன்றி உங்கள் நினைவுகளே
வழிகாட்டுதப்பா

கைதடி - நுணாவில்,
சாவகச்சேரி.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.
குடும்பத்தினர்

## விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி

இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

2020 தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கான....

மாபெரும் விசேட செயலமர்வு

8.30AM - 2.30PM

செப்ரம்பர் 5,6,7 — பொறியியல் தொழினுட்பவியல்
P.சண்முகதாசன் S.சதீஸ்குமார்
K.ரவிக்குமார் R.சிவரூபன்
R.நிருஜன் P.கணேஷ்

செப்ரம்பர் 5,6,7 — உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
M.விஷ்ணுதேவன் R.நிருஜன்
P.நிரோஜன் K.ரவிக்குமார்

★ இம்முறை COVID - 19 தாக்கத்தால் இழந்த கல்வியை ஈடுசெய்யும் வகையில்
★ அனைத்துப் பாடங்களுக்கும் இம்முறை பரீட்சையில் எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் வழங்கப்படும்.
★ பாடப்பரப்புக்கள் அனைத்தும் துரித மீட்டல் செய்யப்படும்.
★ புதிய மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.
★ சிரமமின்றி கையேடுகளைப் பெற்றுக்கொள்ள முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

முற்பதிவுகளுக்கு:- 077 248 7774 / 021 221 7860

## Techno World
தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

A/L 2020 தொழில்நுட்ப பிரிவு

மாபெரும் விசேட செயலமர்வு

காலை 8 - மதியம் 2.30 | 07.09.2020 முதல்

| திகதி | பாடங்கள் |
|---|---|
| 7-9,12-15, 25-27 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 10-14,26-27 | பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 18-21 | I.C.T, விவசாய விஞ்ஞானம், புவியியல், ஊடகக்கல்வி, கணிதம்(7),சித்திரம் |

ஆரம்பம் 07.09.2020 (8am - 2.30pm)

மாவட்ட முதல்நிலை பெற்ற மாணவர்கள்

2019
மதுசாலினி (KIII) 01(BT)
யோகதீபன் (JAF) 01(BT)
யசிதா (MULLAI) 01(BT)
அருள்ராஜ் (MAN) 01(ET)
தனுஜன் (MULLAI) 02(BT)
தூசன் (KILI) 02(BT)
ஜீவரதன் (MULLAI) 02(ET)
பிரியங்கன் (KILI) 02(ET)
தக்சயன் (MULLAI) 03(ET)
நிலவன் (KILI) 03(BT)
ஜந்துசன் (JAF) 03(ET)
லாவண்ஜா (JAF) 04(BT)


2018
கலக்சிகா (JAF) 01(BT)
ரஜிதா (MULLAI) 01(BT)
விதுர்சன் (KILI) 01(BT)

2017
கேசனா 01(BT)
தமிழினியன் 01(ET)
மேரிகனிஸ்ரா 02(BT)
சரண்சனா 03(BT)
கோகுலன் 03(ET)

தொடர்புகளுக்கு : 0770175346, 0771703549

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து முருகமூர்த்தி



பிறப்பு 21.06.1954
இறப்பு 27.08.2020

கல்லைவேம்படி சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் அம்பனை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும், கனடாவில் வசித்து வந்தவருமான சரவணமுத்து முருகமூர்த்தி கடந்த (27.08.2020) காலமானார். அன்னார் சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சரவணமுத்து அமுதம் தம்பதியரின் மகனும், சுன்னாகத்தை சேர்ந்த காலஞ்சென்ற மனோகரன் மற்றும் பொற்கொடி தம்பதியரின் மருமகனும், சுபந்தினியின் (கனடா) கணவரும், ஜெலாஜி, பிறேம்ஜி, றாம்ஜி ஆகியோரின் தந்தையாரும், காயத்திரியின் மாமனாரும், அனிஷ்கா, அரிஷன், அரினா, ஆர்யன் ஆகியோரின் பேரனாரும், கெங்காதேவி (சுழிபுரம்), தவமணிதேவி (சுழிபுரம்), காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் கமலாதேவி (கனடா), வசந்தகுமாரி (கனடா), குகனேஸ்வரி (உரும்பிராய்), நகுலேஸ்வரி (திருகோணமலை) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, தங்கவேலு, துரைசிங்கம், சுப்பிரமணியம் மற்றும் ரவிச்சந்திரன் (கனடா), சீவரத்தினம் (உரும்பிராய்) ஆகியோரின் மைத்துனரும், கெங்காதரன் (கனடா), மனோகரன் (நவாலி), காலஞ்சென்ற செந்தூரன் மற்றும் கிருபாகரன் ஞானச்செல்வி (மலேசியா) திருச்செல்வி, முரளிதரன் தவறஞ்சன் (வரதலக்ஷ்மி வெதுப்பகம்) தவறஞ்சி, காலஞ்சென்ற தவக்குமார் மற்றும் தவக்குமாரி தனரூபன் (பிரான்ஸ்), துர்க்கைநாதன் (றாயன்-கனடா) றகுநாதன் (றமணி-அமெரிக்கா) கமலநாதன் (றமேஸ்-கனடா) பார்த்தீபன் (கனடா) தயன் (கனடா) குகராஜ், ஜீவராஜ் ஜீவிதா (உரும்பிராய்) மதுராவ், யுகன் (திருகோணமலை) ஆகியோரின் தாய்மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். அதே தினம் அவரது சொந்த இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்லை வேம்படி, சுழிபுரம்.

தகவல்:
சகோதரிகள், மருமக்கள்.

## மரண அறிவித்தல்

### தம்பிராசா மனோகரன்



தோற்றம் 05.04.1968
மறைவு 02.09.2020

தோணிக்கல் வவுனியாவை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா மனோகரன் 02-09-2020புதன் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் பத்மாதேவி ஆகியோரின் மகனும், சிவகுமாரியின் அன்புக் கணவரும், எரோண், அறிக்ஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கெங்காதரன் (சுவிஸ்), தவறஜனி (சுவிஸ்), தயாளினி, அமுதாகரன் (கனடா), சசிகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பரமேஸ்வரலிங்கம் (சுவிஸ்), றமணி (சுவிஸ்), சிவானந்தன், றதீபா (கனடா), வினோஜா (கனடா), ஆகியோரின் மைத்துனரும், அரவிந் (சுவிஸ்), அஜித் (சுவிஸ்), செந்தூரன் (பிரான்ஸ்), தர்சனா ஆகியோரின் மாமனாரும், கீர்த்தன் (சுவிஸ்), ஆர்த்திகா (சுவிஸ்) ஆகியோரின் சிறிய தந்தையும் அஷிஷ் (கனடா), அனோஜ் (கனடா), அஸ்வின் (கனடா), அஸ்விகா (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 07-09-2020 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : தர்மலிங்கம் சிவானந்தன்
021 224 0297

சண்டிலிப்பாய் வடக்கு



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.